விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 133 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 25, வியாழக்கிழமை 07.04.2016

வாசனா சம்பத NLB
இன்றைய சுப்பர் பரிசு
154
[15,497,393.60]
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

## புத்தாண்டன்று யாழில் சுட்டெரிக்கும் வெயில்

யாழ்ப்பாணம், ஏப். 7

வெப்பத்தின் கொடுமை இப்பொழுதே அதிகரித்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் புதுவருட தினத்தன்றும் மறுநாளும் தற்போதுள்ள வெப்பநிலையைவிட மேலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும் என்று யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த காலப் பகுதிக்குள் சிறு மழை பெய்ய வாய்ப்புள்ளபோதும், அதனைப் பெரியளவில் எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், வடக்கில் நேற்றுவரை வடக்கு - கிழக்கு பருவப் பெயர்ச்சிக்காற்று நிலவிய நிலையில், நேற்றுப் பிற்பகலிலிருந்து இடைக்காலப் பருவப் பெயர்ச்சிக்காற்று நிலவுகிறது. இதனால் பிற்பகலில் பக். 23

# பொருத்து வீடமைப்பை இடைநிறுத்தப் பணிப்பு

### அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

பொருத்து வீட்டுத் திட்டப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறும், மீளாய்வின் பின்னர் அது தொடர்பில் முடிவெடுக்கலாம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று அறிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இதன் போது பொருத்து வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்துக்குப் பல்வேறு தரப்புக்களும் எதிர்ப்புக்கள் வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில் இந்த வீட்டுத் திட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்துமாறும், அதுவரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் 65 ஆயிரம் பொருத்து வீடுகள் (உருக்கு) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 21 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன. முன்னோடியாக இரண்டு வீடுகள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்துமாறு, வடக்கு மாகாண சபை கடந்த அமர்வில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. பக். 23

## மகிந்த குடும்பத்தின் பெயர்களும் பனாமா ஆவணங்களில் உள்ளதா?

### ஆராயுமாறு இலங்கை அரசு பணிப்பு

கொழும்பு, ஏப். 7

உலகளாவிய ரீதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பனாமா ஆவணங்களில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரின் பெயர்களும் உள்ளடங்கியிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



வரி ஏய்ப்புச் செய்து இரகசியமாக வங்கிகளில் பணத்தைப் பதுக்கியுள்ளவர்கள் தொடர்பான விவரங்கள் பனாமா ஆவணங்கள் என்ற பெயரில் கசிந்துள்ளன.

வரி ஏய்ப்புச் செய்து பணத்தைப் பதுக்கியுள்ளவர்களில் உலகத் தலைவர்கள், நடிகர்கள் மற்றும் பிரபலங்கள் பலரும் உள்ளடங்கியுள்ளனர். ரஷ்ய ஜனாதிபதி புடின், நடிகர்கள் அமிதாப்பச்சன், ஜாக்கிசான், ஐஸ்வர்யா ராய் உள்ளிட்ட பலரும் இதில் இடம்பெற்றுள்ளனர். இந்த ஆவணங்கள் கசிந்ததையடுத்து, அதில் பக். 23

## விகாரையைப் பார்வையிட ஆளுநருக்கு நேரமில்லை

### காத்திருந்த காணி உரிமையாளர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 7

கொக்கிளாய் விகாரையைப் பார்வையிடுவதற்கு நேற்று நேரம் கிடைக்கவில்லை. அத்துடன் இப்போதைக்கு அங்கு சென்று பார்வையிடும் திட்டமும் இல்லை.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய்ப் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. இதனைப் பார்வையிடுவதற்கு ஆளுநர் கூரே நேற்று வருகை தருவதாகத் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றிருந்த ஆளுநர் கூரே, விகாரையைப் பார்வையிடாமல் மாவட்டத்திலிருந்து வெளியேறி வவுனியாவுக்குச் சென்றிருந்தார். விகாரையை ஏன் நேரில் சென்று பார்வையிடவில்லை என்று ஆளுநரிடம் கேட்ட போது, பக். 23

## இரசாயனப் பரிசோதனையில் சாவகச்சேரி வெடிபொருள்கள்

### சம்பவம் தொடர்பில் இதுவரை 11 பேரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஏப். 7

சாவகச்சேரி - மறவன்புலோவில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்களை இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அவை மீட்கப்பட்டமை தொடர்பில் நேற்றுவரை 11 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பக். 23

முச்சந்தி முரளி



அப்ப கல்வீடு வருமோ...

நிறைவேறியது ஆட்சியுரிமை சட்டம் பக். 03

## 590 சிங்களக் குடும்பங்களுக்கு முல்லையில் நிரந்தர வீடுகள்

### அமைத்துக் கொடுப்பதாக அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 7

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மற்றும் நாயாற்றுப் பகுதியில் தங்கியுள்ள 590 பெரும்பான்மையினக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகக் கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடந்த 2 ஆம் திகதி அமைச்சர் மகிந்த அமரவீர பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணம் தொடர்பில் மீன்பிடி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றில் 290 குடும்பங்களும் கொக்கிளாயில் 300 குடும்பங்களுமாக 590 சிங்களக் குடும்பங்கள் பக். 23

## இந்திய மீனவர்கள் 76 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 7

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்ததோடு, மீன்பிடியிலும் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைகளில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறுவர் தொழிலாளர்கள் உள்ளிட்ட 76 இந்திய மீனவர்களும் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைத்து 44 மீனவர்களும், ஊர்காவற்றுறை பக். 23

## இன்று விவாதத்துக்கு வருகிறது வடக்கு அரசின் தீர்வுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு வரைவு, மாகாண சபையின் இன்றைய அமர்வில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் முன்மொழியப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காகப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும், அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகப் பொதுமக்கள் கருத்தறியும் குழு ஆலோசனைகளைப் பெற்றுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாண சபை, தமிழ் மக்கள் சார்பில் தீர்வு வரைவு சமர்ப்பிக்கவேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள், முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கமைய கடந்த ஜனவரி மாதம் வடக்கு மாகாண சபை அமர்வில், தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்காக மாகாண சபை உறுப்பினர் பக். 23

## வெள்ள நிவாரண மோசடி; விசாரிக்க வருகிறது குழு

யாழ்ப்பாணம், ஏப். 7

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற வெள்ள நிவாரண மோசடி தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விரைவில் வருகை தரவுள்ளதாக, மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் நவம்பர் - டிசெம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத் பக். 23

## கோப்பாய் விபத்தில் குடும்பஸ்தர் சாவு; நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 7

கோப்பாய் - பருத்தித்துறை வீதியில் நேற்று மாலை இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயபாலன் (வயது-51) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த விபத்துத் பக். 24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. யாழ். சாலை முகாமையாளருக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை விரைவில்

## ஊழியர் சங்கங்கள் இணைந்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் தமக்கு அநீதி இழைத்து வருகிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ள ஊழியர்கள், அவரது அடாவடிகளைக் கண்டித்து விரைவில் ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கவுள்ளன என்றும் தெரிவித்தனர்.

இது குறித்து யாழ்.சாலையில் இயங்குகின்ற சிறிலங்கா சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம், தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பன இணைந்து ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

யாழ்.சாலை முகாமையாளரின் அநீதிகளால் ஊழியர்கள் பலர் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஊழியர்களைக் குறிவைத்து அவர்களைக் குற்றவாளிகளாக்கும் நோக்குடன் குற்றப் பத்திரம் தயாரித்தல், தண்டப் பணம் அறிவிடுதல், இடைநிறுத்தம் செய்தல், இடமாற்றம் செய்தல், தண்டப் பணம் பெற்று மீட்டல் பயிற்சி வழங்குதல், வேலை நீக்கம் செய்ய முற்படுதல், மாதாந்தக் கலந்துரையாடல்களைத் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தாமல் தன்னிச்சையாக முடிவுகளைச் செயற்படுத்தல், தொழிற்சங்கங்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளால் ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகத் தனியார் பஸ்ஸை முந்திச் செல்லத்தவறின், அந்தச் சாரதிக்கும் காப்பாளருக்கும் எதிராக தனியார் பஸ்ஸுக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்று குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு சம்பளத்தில் தண்டப்பணம் அறவிடப்படுகிறது. அதுமட்டுமன்றி மேலதிக தண்டப்பணம் கட்டி மீட்டல் பயிற்சி பெற்றே ஆக வேண்டும். பஸ்கள் போட்டிபோட்டு ஓடுவதற்குச் சாலை முகாமையாளரின் இவ்வாறான செயற்பாடுகளே பிரதான காரணம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வழிப்பட்டியல் வருவாய் குறைவாக இருந்தால் தண்டப்பணம் கட்டவேண்டும் என்று ஊழியர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சாலை முகாமையாளரின் அநீதிகளுக்கு உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர். தொழிற்சங்கங்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. மாதாந்த ஊழியர்கள் தொடர்பான கலந்துரையாடலில் தொழிற்சங்கங்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. மாதாந்த ஊழியர்கள் தொடர்பான கலந்துரையாடலில் தொழில் சங்கங்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தொழிற்திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிமன்றம் போன்றவற்றை நாடவேண்டியுள்ளது. அண்மைக்காலமாக வடமாகாண தொழிற்திணைக்களம் ஊழியர் பிணக்குகளில் அதிகம் அக்கறை செலுத்தவில்லை. யாழ். சாலை முகாமையாளருக்கு எதிரான முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளன. யாழ்.சாலை முகாமையாளரின் செயற்பாடுகளைக் கண்டித்துத் தொழிற்சங்க சட்ட விதிகளுக்கு அமைவாக தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான நேரம், திகதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்படும் – என்றுள்ளது. (ந–4)



## நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க கிளி. மீனவருக்கு உபகரணங்கள்

கிளிநொச்சி. ஏப்.7
வடக்கில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நன்னீர் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் 20 லட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவில் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அலுவலகத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வு, கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயத்தில் இடம்பெற்றது.

பெரிய மற்றும் சிறிய ஓடங்கள், நன்னீர் மீன்பிடி மானிய வலைகள், உயிர்காப்பு அங்கிகள் போன்ற உபகரணங்களே மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் – தண்ணீர் முறிப்பு, தென்னியங்குளம், விசுவமடு முறிப்பு, முத்தையன்கட்டு, வவுனிக்குளம், மதவாளசிங்கம் குளம், உடையார்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடி அமைப்புக்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில், அக்கராயன் குளம், வன்னேரிக் குளம், கரியாலை நாகபடுவான் குளம், புது முறிப்புக் குளம், ஆனைவிழுந்தான் குளம், இரணைமடுக் குளம், வெலிஓயாக் குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நன்னீர் மீனவர் அமைப்புக்களுமாக மொத்தம் 14 நன்னீர் மீன்பிடி அமைப்புக்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோரும், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், இலங்கை தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் விரிவாக்கல் பணிப்பாளர், திருமதி கே.பி. புஷ்பலதா, அமைச்சின் உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி என்.சஜீவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந–21)

## புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டது

சாவகச்சேரி, ஏப்.7
சாவகச்சேரி, டச்சு வீதியில் புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் மின்பாவனை எல்லை அதிகரிப்பால் தமது மின்சாதனங்கள் செயற்படவில்லையெனவும் அதனால் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்த மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது.

டச்சு வீதி, காளி கோவில் வீதி, கண்டுவில் ஒழுங்கை, கண்டுவில் முதலாம் ஒழுங்கை, கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை பெருங்குளம், சங்கத்தானை வீதி, சங்கத்தானை இரண்டாம் ஒழுங்கை போன்ற இடங்களில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள், ஆலயங்கள், தொழில் நிலையங்கள் போன்றவை சிரமமின்றி மின்சாரம் உபயோகிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந–9)


# வற்றாப்பளை கண்ணகி ஆலயம் ரூ.12 கோடி செலவில் புனரமைப்பு

முல்லைத்தீவு. ஏப்.7
12 கோடி ரூபா நிதியில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஒரு கோடியே 60 லட்சம் ரூபா நிதி கருங்கல்லால் அமைக்கப்படும் மண்டபங்களுக்கு செலவாகியுள்ளது.– என்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நிதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பக்தர்களால் ஆலயத்துக்கு வழங்கப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து ஆலய நிர்வாகப் பொருளாளர் சபேசன் தெரிவித்ததாவது–

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கருவறை, மகா மண்டபம் ஸ்ஸ்பன மண்டபம் ஆகிய மூன்றும் கருங்கல்லால் நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக இந்தியாவிலிருந்து கருங்கற்கள் இறக்கப்பட்டு ஆலய வளாகத்தில் வைத்து இந்திய தொழிலாளர்களால் உரிய முறையில் கருங்கற்கள் செதுக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. இதற்காக 1கோடியே 60 லட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.



ஆலய உள் வீதியை உள்ளடக்கிய 32 ஆயிரம் சதுர அடி பரப்பானது 18 அடி உயரத்தில் 96 தூண்கள் நிறுத்தப்பட்டு முழுமையாக கொங்கிரீட் இடப்படவுள்ளது. ஆலயத்தின் கட்டுமான ஒட்டு மொத்த புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்காக 12 கோடி ரூபா நிதிக்கு மேல் செலவிட வேண்டிய தேவை உள்ளது. இந்த நிதிகள் அனைத்தும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பக்தர்களுடையதே.

இந்தப் பணிகள் அனைத்தும் 2017ஆம் ஆண்டு வைகாசி மாதம் முடிவுறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்த பொங்கலின் போது முழுதாகக் கட்டி முடிக்கப்பட்ட கண்ணகி அம்மன் ஆலயத்தை பக்தர்கள் காண்பார்கள்– என்றார். (ந–21,102)




யாழ். மாவட்ட செயலகம் முன்பாக குப்பைகளை கொட்டுவதற்கான மூவர்ணக் கூடைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடதாசிக் கழிவு, உக்கக்கூடிய கழிவு மற்றும் கண்ணாடி, தகரம், பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப் பொருட்களை கொட்டுவதற்கான கூடைகளே இவ்வாறு வைக்கப்பட்டுள்ளன. தற்போது யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட முக்கிய சந்திப்பகுதிகளில் இதுபோன்ற கூடைகளை யாழ்.மாநகரசபை அமைத்து வருகின்றது. (ந)

# வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவான பயனாளர் விவரங்கள் பார்வைக்கு

சாவகச்சேரி, ஏப்.7
தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் 8 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கு புள்ளிகள் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 289 பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் பிரதேச செயலகம், பிரிவு கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் அலுவலகங்கள் என்பவற்றில் நேற்றுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பான அபிப்பிராயங்கள் ஆட்சேபனைகள் போன்ற, வற்றை எழுத்து மூலம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்க முடியும் என்று பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகக் காணப்பட்டு பின்னர் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட தனங்களப்பு, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், கோயிற்குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் ஏனைய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பெண் தலைமைத்துவப் பெற்றோரை இழந்த குடும்பங்கள் காணமற்போன, போரால் இறந்த குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள், அரசால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட குடும்பங்கள், விசேட தேவையுடைய குடும்பங்கள், வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள், இந்தியாவிலிருந்து வந்துள்ள குடும்பங்கள் போன்றவற்றில் இருந்து புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ந–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறியது ஆட்சியுரிமை சட்டம்

## போரினால் அசையாச் சொத்துக்களை இழந்தவர்கள் உரிமைகோரி நீதிமன்றில் வழக்குத் தொடரலாம்

கொழும்பு, ஏப். 7

போர் நடைபெற்ற காலப்பகுதியில் காணி உள்ளிட்ட அசையாச் சொத்துகளை இழந்த நிலையில், அதன் உரிமையை மீளப்பெற முடியாமல் போனவர்கள் அந்தச் சொத்துக்களின் உரிமையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு வழக்குத் தொடர்வதற்கான உரிமத்தை வழங்க வழிவகுக்கும் ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி 1983ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் போர் முடிவுக்கு வந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் தமது காணிகளின் உரிமையை அனுபவிக்க முடியாமல், அவற்றின் உரிமத்தை இழந்தவர்கள், தங்களுக்குரிய உரிமத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்றத்தை நாடமுடியும்.

இலங்கையில் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் தமது உரிமைகளைத் தொடர்வதற்கு அல்லது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இயலாதிருக்கின்ற ஆள்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர் புபட்ட அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்கள் ஆகியவற்றை இயலச்செய்வதற்குமானதொரு சட்டம் என்றே இந்தச் சட்ட வரைவுக்கு முகப்புரை வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுப்பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, விசேட அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர், ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச.

ரோமன் டச்சு சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே இவ்வளவு காலமும் ஆட்சியுரிமைச் சட்டம் இருந்தது. அதன் ஏற்பாடுகளின் பிரகாரம், யாதேனும் ஒருவருக்கு உரித்தான அசையும் அல்லது அசையாச் சொத்துகள் 10 வருடங்களுக்கு மேலாக வேறொருவரால் அனுபவிக்கப்பட்டிருப்பின், அந்த அனுபவிப்பின்பேரில் சம்பந்தப்பட்ட சொத்தின் உரிமம் 10 வருடங்களுக்கு மேலாக அதை அனுபவித்தவருக்குச் சென்றுவிடும். அதாவது, போர் மூன்று தசாப்த காலமாக நீடித்திருந்த நிலையில், ஒருவர் தமது சொத்தின் உரிமத்தை மீட்டுக்கொள்வதற்கான கால அவகாசம் 10 வருடங்கள் என்பது குறுகிய காலப்பகுதியாகவே அமைந்திருந்தது. 1983ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் போர் முடிவுக்கு வந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், யாதேனும் நபரொருவரால் தமது சொத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்து அனுபவிக்க முடியாமல் போயிருந்தாலோ, அல்லது நீதிமன்றத்தை நாடி தமது காணி உரிமத்தை மீளப் பெறமுடியாமல் போயிருந்தாலோ, அது இந்த நாட்டில் நிலவிய மோதல்களால் அந்த நபருக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே அமைந்திருக்கும் என்றும் நீதி அமைச்சர் கூறினார்.

இவ்வாறான நிலைமைகளால் வடக்கு, கிழக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல் நிலவுவதால், அவ்வாறான காணிகளின் உரிமத்தை அவற்றின் உரிமையாளர்கள் மீளப்பெற்றுக் கொள்வதற்கு ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவின் ஊடாக ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். (து-வ-சி)

Galaxy Star
வெற்றி வாரம் 049
திகதி 06.04.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 02 27 33 43
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,288,020/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2757
திகதி 06.04.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
05 21 51 61 E
போனஸ் இல.
03
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 13,608,750/-
2016.04.09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
APRIL 09
(சனிக்கிழமை)
காலை 9.00 மணி முதல்
09, 10, 11, 12 ஆகிய நான்கு தினங்களில்
Smart Phone கள் உட்பட அனைத்து Phone களிலும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால், ஆசன முன்பதிவு செய்யவும்.
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியளிக்க முதன்மை ஆசிரியர்
Ganesh
பெறுமதியான CERTIFICATE வழங்கப்படும்
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும்
வயதெல்லை இல்லை, ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது
ஆசன முன் பதிவுக் கட்டணம் 1,000/-
பாடநெறி கட்டணம் 11,500/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
iCS Education
77, Clock Tower Road, Jaffna
பதிவுகளுக்கு 077-6131358

பிரித்தானிய முகாமைத்துவ பட்டத்தகைமைகள்


BTEC HND
BUSINESS MANAGEMENT
Leads to BBA
April intake
16.04.2016
மேலதிக விபரங்களுக்கு
071 777 5 666
021 490 0 900
பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk


உ
கற்பகன் துணை
தென்கோவை
கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்
இருபாலை, கோப்பாய்.
நூதனசுந்தர இராஜகோபுர ஸஹித புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ
மகா கும்பாபிஷேக பெரும்சாந்தி விழா
கர்மாரம்பம்
07.04.2016 வியாழக்கிழமை
மாலை 5.30 மணி - 6.30 மணிவரை
எண்ணெய்க்காப்பு
09.04.2016 சனிக்கிழமை
காலை 6.00 மணிமுதல்
10.04.2016 ஞாயிற்றுக்கிழமை 12 மணிவரை
கும்பாபிஷேகம்
11.04.2016 திங்கட்கிழமை
முற்பகல் 10.10 மணிமுதல்
12.00 மணிவரை
தென்கோவை, இருபாலை, கோப்பாய்.
தேவஸ்தானம்.
விளம்பர அனுசரணை:-
கஜோலா[illegible]ந்தகாரர்)-இனுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய சாரதிக்கு மறியல்

சாவகச்சேரி, ஏப்.7
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதியை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் கடந்த 24 ஆம் திகதி உசன் பகுதியில் அனுமதிப்பத் திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகன மொன்று கைப்பற்றப்பட்டிருந்தது.

வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலி ஸார் வழக்குத் தாக் கல் செய்திருந்த னர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த வாகனத் தின் சாரதியை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத் தரவிட்டிருந்தார். குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதியை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

அதேவேளை மிருசுவில் பகுதி வீடொன் றில் திருடும் நோக்கில் கூரை மீது ஏறிய நாவற்குளி வாசியை அப்பகுதி மக்கள் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். கடந்த 14 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் குறித்த நபரை முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று விசார ணைக்காக அழைக்கப்பட்டபோது தொடர்ந்து 20 ஆம் திகதிவரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-9)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பான விலைகளில்
DELL hp lenovo
Celeron / i3 / i5 / i7 6th Gen
Note Book
ஆரம்ப விலை 49,000/= இலிருந்து
i3 / i5 6th Gen
ஆரம்ப விலை 76,000/= இலிருந்து
hp brother Canon
Hp 1112 Printer → 3,450/=
Hp 2135 (Print/Copy/Scan/) → 8,900/=
Laser HL 1210w Wireless Printer → 12,000/=
Laser CP 1510 (Print/Copy/Scan)Printer → 22,500/=
MiPAQ
2.1 → 3,800/= இலிருந்து
4.1 → 6,000/= இலிருந்து
5.1 → 7,000/= இலிருந்து
Karooke 17,000/= இலிருந்து
KKBRO TOUCH YOUR LIFE
4CH/8CH/16CH/32CH
NVR'S Available
AHD DVR → 10,000/= இலிருந்து
AHD Camera → 3,800/= இலிருந்து
Wireless IP Camera → 9,500/=
KKBRO TOUCH YOUR LIFE
Wireless IP Camera Kit → 65,000/=
Plug and Play
Wireless IP NVR Kits
MICRO PC SYSTEMS
No.218, Hospital Road, Jaffna.
Jaffna : 218,Hospital Road,Jaffna 021 222 5893
Nelliyadi : Pointpetro Road,Nelliyadi 021 222 2929
Killinochchi : 85A,Old Kachcheri Opposite A9Road, Killinochchi 021 228 5593
Vavuniya : 73, 2nd Cross Street 024 222 1969
E-Mail: jaffna@micropcsystems.com / Web: www.micropcsystems.com
HOTLINE: 077 396 3280/ 071 035 6065/ 021 222 5893

## நிர்வாக சபை தெரிவு

கரணவாய், ஏப்.7
வல்வை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக் குப் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் தலைவராக தி.முரளிதரனும் உப தலைவர்களாக ஏ.சித்திர வேல், மற்றும் சா.ஸ்ரீபதி ஆகியோரும், செயலாளராக ம.மயூ ரனும், உபசெயலாளராக எஸ்.எக்ஸ்.குலநாயகமும், பொருளா ளராக எஸ்.தங்கேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக சி.பரமசிவம், தி.ஞானவேல், எஸ்.சிவஞானசுந்தரம், ச.சின்னத்தம்பி, எஸ்.குமாரவேல், தி.இரவீந்திரன் எஸ்.மோகனநாய கம், செல்வி வி.பிர தீபா மற்றும் எஸ். சாரதா ஆகியோர் தெரிவுசெய்யப்பட் டனர். (ற-108)

நாடகப் போட்டி
உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மாபெரும் நாடகப் போட்டி யாழ் மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கமும் யாழ் மாவட்ட கிராமிய கலை மன்றமும் இணைந்து 21.05.2016 அன்று நடத்த உள்ளது.
முதலாம் பரிசு 10000/=
2ஆம் பரிசு 7000/=
3 ஆம் பரிசு 5000/=
விண்ணப்ப முடிவு திகதி 25.04.2016
தொடர்புகளுக்கு
தலைவர்: A.தெய்வேந்திரம் (கலாபூசணம்)
கிராமிய கலைமன்றம் யாழ் மாவட்டம்
காளி கோயிலடி
தாவடி தெற்கு, கொக்குவில்.
077 6325 216
கிராமிய.உ. சங்கம்
யாழ் மாவட்டம், செயலாளர் T. சித்திரா
உரும்பிராய் வடக்கு
077 1014 210
தலைவர் N. இன்பம்
077 704 3635

சட்டக் கல்லூரி அனுமதிப்பரீட்சை 2016
அனுமதிக்கான உயர் புள்ளியைப் பெற சிறப்பு வழிகாட்டல் வகுப்பு (அனுமதி மட்டுப்படுத்தபட்டது முந்துங்கள்.)
ஆரம்பம்: 09.04.2016
2.00PM (சனி)
T.P: 077 982 4284
D.C.M சென்ரர், யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

தேவை
திருநெல்வேலியில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
077 771 4558, 077 2151 875

கண்ணன் தரகு தொடர்பு நிலையம்
TN.DS.PS.0165
திருமணப் பொருத்துனர், காணிகள், வாகனங்கள், வீடுகள், கடைகள், விற்கவும், வாங்கவும், வாடகைக்கும்
சி. செல்வமலர் : 077 480 6542, 077 961 2713

## பெயர்க்கல் திரைநீக்கம்

மிருசுவில் விடத் தற்பளை கமலா சனி வித்தியால யத்தில் பழைய மாணவர் ஒருவ ரால் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட மதில் கையளிப் பும், பெயர்க்கல் திரைநீக்கமும் நாளை வெள்ளிக் கிழமை மு.ப. 9.00 மணிக்கு இடம்பெறும்.

வித்தியாலய அதி பர் இ.நாகேந் திரன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் க.பேரம்பல மும், சிறப்பு விருந் தினராக தென் மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல் விப் பணிப்பாளர் திருமதி வி.சுனில் ஆரியரட்ணவும், கௌரவ விருந்தி னராக மதிலை அமைத்து வழங் கிய வித்தியாலய பழைய மாண வனும், சட்டத்தர ணியுமான க.சிவ சுப்பிரமணியமும் கலந்து கொள்ள வுள்ளனர். (ற-9)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்
வட்டாரம் :- 05
ஆதன இலக்கம் :- 38(புதிய இலக்கம்)
குளப்பிட்டிவீதி,
கிராமசேவையாளர் பிரிவு :- J/132
வட்டாரம் 05 குளப்பிட்டி வீதி, ஆதனஇலக்கம் 38(புதிய இலக்கம் ) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி ஆனைக்கோட்டை இறை " ஊமைக்காடும் ஆட்டுப்பட்டி முலையும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 கொண்ட) இவ்வாதனமானது ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த ஞானமுத்து அன்ரன் பெண் தேவராணி ஆகிய இவர்களால் குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு. சிவலிங்கம் இளங்கீரன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 4954 ஆம் இலக்க 2016.02.08 ஆம் திகதிய உறுதிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து-வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.எம். செல்வராஜா அவர்களால் வரையப்பட்ட MS/10/2016 இலக்க 2016.02.25 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " ஊமைக்காடும் ஆட்டுப்பட்டி முலையும்" நிலப்பரப்பு 02 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஞானமுத்து அன்ரன் பெண் தேவராணி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

ABI யின்
புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி
தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்..

இன்பத்தின் தருணங்கள்
எங்கெங்கு உண்டோ
அபியின் ஆடை வகைகள்
அங்கங்கு உண்டு.
உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப
20% முதல் 50%
வரையான விசேட
விலைக்கழிவுகள்
சில ஆடைகளுக்கு
ஒன்று வாங்கினால்
இன்னொன்று இலவசம்
இச் சலுகை 14.04.2016 வரை மட்டுமே
"எதை எடுப்பது எதை விடுவது என்ற சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"
அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 3% விசேட விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 3738
ABI Fashion World

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் மொத கற்கைநெறி

(Trainer Training (Teacher Training Diploma)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)**
**9.am (18.04.2016) திங்கள் (Week day batch)**

**4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்**

English Language Adventure School
Nothing is impossible to do
ELAS

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

## சிறிகுமரன் ரெக்ஸ்

**தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்**



**இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

விசேடமாக Office Wear Sarees

- பட்டுச்சாறி
- சல்வார்
- பன்சிசாறி
- சல்வார் துணி
- கொட்டன்சாறி
- TOPவகைகள்
- ரவுசர், சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**சிறிகுமரன் ரெக்ஸ்**
**770.K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு**

| | |
|---|---|
| வங்கியியல் கற்கைநெறிகள் IABF & DABF | Medium :- Tamil & English<br>Minimum qualification :-<br>G.C.E. O/L 6 Passes including 5 Credits |
| பட்டயக்கணக்காளர் ஆவதற்கு Chartered Accountancy Executive Level , Business level | Medium :-Tamil & English<br>Minimum qualification:-<br>G.C.E. A/L 3 Passes |
| ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு CERTIFICATE COURSE IN ENGLISH | Minimum qualification :-<br>G.C.E. O/L 3 Passes<br>Total Hours :- 130 Hours |

A/L வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன 2016 & 2017 & 2018

Further Details :-
**Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149

(C/29944)(10.17.18)

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

**P. ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:**
**384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)**
**தொலைபேசி: 021 221 7944**
**கொழும்பு முகவரி:**
**19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி**
**தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208**

(சி. 22235)
(12.18)

# அம்பாள் ரேட்
## பிறைவேற் லிமிடெட்

புடவை விற்பனையில் மாபெரும் புரட்சி

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மிகத் தரமான உடைகள்

## மிகப்பெரிய மலிவு விற்பனை

ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்தும் எமது சேவை.

அதிர்ஸ்டத்தினை தவறவிடாதீர்கள் | பணத்தினை மீதப்படுத்துங்கள் | தரமானவற்றை மலிவாகப் பெறுங்கள்

- கொட்டன் துணிகள் பல வண்ணங்களில்
- றொப் வகைகள்
- சல்வார் துணிகள்
- பல விலைகளில் பல டிசைன்களில் சில்க், கொட்டன் சாறிகள்
- சிறுவர்களுக்கான சோளிகள், குருதாக்கள்
- வேட்டிகள் இன்னும் பற்பல.

**வந்தவர்களைக் கேட்டுப் பாருங்கள்.**
**ஒருமுறை வந்து பாருங்கள்.**
**வேறிடம் நாடமாட்டீர்கள்.**
**தரமும் மலிவும் ஒரே இடத்தில்**

உங்கள் தெரிவுகளை நீங்களே தெரியுங்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, முதல் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண படனம் பூர்த்தி நாளை

பருத்தித்துறை, ஏப்.7
தும்பளை - நெல்லண்டை பத்திரகாளி ஆலயத்தில் நடைபெற்று வரும் கந்த புராண படனத்தின் பூர்த்தி நாளை வெள்ளிக்கிழமை வள்ளியம்மன் திருமண படனத்துடன் நிறைவுபெறும். படனப் பூர்த்தி நிறைவாக நாளை மறுதினம் அன்னதானமும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை நிறைமணி அன்னதானமும் நடைபெறவுள்ளன.
கடந்த தைப்பூசதிருநாள் அன்று கந்த புராண படனம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (தி)


## கண்ணீர் அஞ்சலி



அமரர் ஆறுமுகம் கந்தசாமி
(பட்டயக்கணக்காளர்)
(கணக்காய்வாளர்,
யாழ். வணிகர் கழகம்)
தோற்றம் : 13.03.1946
மறைவு : 05.04.2016

அமைதியான உன் சொரூபத்தை
ஆழமான உன் புலமையை
இனி எங்கு காண்போம்...?
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி.22 483) (13.18)
யாழ்.வணிகர் கழகம். (சி.22483) (13.18)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நாகமுத்து இராசா



தோற்றம் 16.10.1945
மறைவு 15.03.2015
திதி: 07.04.2016

ஆண்டுகள் ஆறு ஆனதப்பா
அன்பான திருமுகம் பார்த்து
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - நீங்கள்
எமை விட்டுப் பிரிந்த துயர் அகலாது
உங்கள் ஆத்மா சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திப்போம்.

மாலியாவத்தை,
சங்கானை.
துயருறும்
குடும்பத்தினர்.


# சீனாவுடனான பொருளாதார உறவை மேம்படுத்தத் திட்டம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7
சீனாவுடன் பொருளாதார உறவுகளை விரிவாக்கிக் கொள்ளவதற்கு எதிர் பார்த்துள்ளோம் என்றும் -இலங்கையில் முதலீடு செய்வதற்காக மேலும் அதிகளவு சீன முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
சீனாவுக்கான மூன்று நாள் பயணத்தை நேற்று ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனாவின் சின்ஹுவா செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சீனாவுடன் நீண்டகால பொருளாதார, முதலீட்டு உறவுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தவுள்ளேன். இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை விரிவுபடுத்தும். சீனா உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்திகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இலங்கையில் சீனா பல முதலீடுகளைச் செய்திருக்கிறது. கடன்களையும், கொடைகளையும் வழங்கியுள்ளது.
சீனாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை அதிகரிப்பதும், இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்பாடு குறித்துக் கலந்துரையாடுவதும் தான் இந்தப் பயணத்தின் நோக்கம். சீனாவின் தனியார்துறை முதலீடுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறேன். எதிர்கால கடன்கள் உள்ளிட்ட பொருளாதார விவகாரங்கள் குறித்தும், கலந்துரையாடப்படலாம் என்று நம்புகிறேன்.
கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்துக்கு பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தனித்துவமான நிதி மற்றும் வணிக மாவட்டம் என்ற சிறப்பு நிலை அளிக்கப்படும். இதற்கென தனியான சட்டங்கள் இருக்கும். எனினும் இறுதியான முடிவை உயர் நீதிமன்றமே எடுக்கும். துறைமுக நகரத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தனியான நிதி மற்றும் சட்ட முறை இருக்கும். இங்கு வந்து சர்வதேச அளவில் வர்த்தகத்தை மேற்கொள்ள முடியும்.
இரண்டாவது பெரிய பொருளாதாரப் பிரதேசமாக அம்பாந்தோட்டையை மாற்றும் வகையில், பிரதான பொருளாதார வலயம் ஒன்றை அமைப்பது குறித்தும் பேச்சு நடத்தப்படும்.
மேல் மாகாண பெருநகர அபிவிருத்தி திட்டம் மற்றும் பொலனறுவையை அபிவிருத்தி செய்யும் திட்டங்களுக்கு உதவ சீனா முன்வந்துள்ளது.- என்றும் தெரிவித்துள்ளார். (ந-5)


## ஓராண்டு நினைவலைகளில்...

அமரர் வீரபத்திரக்குருக்கள் சதுர்ஷன்
அவர்களின் நினைவாக
நாகதம்பிரான் யாகமண்டப நூல் வெளியீடு
காலம் : நாளை (08.04.2016) வெள்ளிக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி
இடம் : மீசாலை கிழக்கு, மீசாலை.
தகவல்:
சிவஸ்ரீ வீரபத்திரக்குருக்கள்



மண்ணில் 19.12.2007
மனதில் 21.03.2015

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் நாகராசா நவரத்தினராசா

கடந்த 08.03.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நாகராசா நவரத்தினராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (07.04.2016) வியாழக்கிழமை கிரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சோடாக்கொம்பனி
கிழக்கு ஒழுங்கை, மல்லாகம்.
குடும்பத்தினர்.
(சி.22486) (13.17.18)

## முதலாம் ஆண்டு சிரார்த்ததினம்

பஞ்சபூதம் நாடி
23 . 05 . 1926



சிவ பாதம் நாடி
20 . 03 . 2015

தென்னிந்திய தமிழ்நாடு வேதாரண்யம், சிதம்பரம் வரணி மடத்தின் அதிபரும், யாழ்ப்பாணம் வரணி கரணவாய் ஆதீனத்தின் முன்னாள் தலைவருமான
ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் வேதமணவாளக்குருக்கள்
அவர்களின் நினைவுதினம் இன்று அமாவாசை திதி: 07.04.2016 வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. இவரது ஆத்மா சாந்திபெற மனைவி, மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப் பிள்ளைகள் மற்றும் தென்னிந்திய தமிழ்நாடு சிதம்பரத்தின் தற்காலிக அதிபர், யாழ்ப்பாணம், வரணி, கரணவாய் ஆதீனத்தின் தலைவர் மற்றும் குடும்பத்தாரும் வேண்டுகின்றோம்.

குறிப்பு: இத்தினத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு, வரணி. (J 151) (13.17.18)
குடும்பத்தினர்.
077467 6884


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி முறைகேட்டால் வவுனியாவில் மூடப்பட்டன ப.நோ.க. கிளைகள்

## முகாமையாளர்களும் இடைநிறுத்தம்

வவுனியா, ஏப்.7

முகாமையாளர்களால் முறைகேடான விதத்தில் நிதி கையாளப்பட்டமையையடுத்து வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் 5க்கும் மேற்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடான விதமாக நிதியை கையாண்ட சில முகாமையாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும், மூடப்பட்ட 5 கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் மிக விரைவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதிய முகாமையாளர்கள் இணைக்கப்பட்டு மறுபடியும் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் தி.புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கிராமப் புறங்களில் உள்ள 5 கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அண்மைக் காலங்களில் திடீரென மூடப்பட்டுள்ளன.

முகாமையாளர்கள் முறைகேடான விதமாக சங்க நிதியைக் கையாண்டார்கள் எனவும், அதிகாரிகளுடைய அசமந்தப் போக்குக் காரணமாகவுமே இந்தச் சங்கங்களின் கிளைகள் மூடப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் தெரிவித்திருந்தனர்.

> வவுனியா மாவட்டத்தில் கிராமப் புறங்களில் உள்ள 5 கூட்டுறவுச் சங்கக் கிளைகள் திடீரென மூடப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளை மூடியமையால் மக்கள் பொருள்களை வாங்குவதற்கு பெரிதும் சிரமப்படுகின்றனர் என்றும், சங்கங்களின் கிளைகளில் குறைந்த விலையில் வாங்கிய பொருள்களுக்கு, தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி உள்ளது என்றும் மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாகக் கேட்டபோதே சங்கப் பொது முகாமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

சங்கத்தின் முகாமையாளர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகளே இந்த கிளைகள் மூடப்பட்டதற்கான காரணம். தற்போது பலர் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்கள். சிலர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிளைகளை மூடியமையால் சுமார் மூன்று மில்லியன் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது. மூடிய ஐந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் மிக விரைவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புதிய முகாமையாளர்களை இணைத்து மறுபடி யும் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நான் இந்த வருடம் சங்கத்தைப் பொறுப்பெடுத்த பின்னர் எவ்வளவோ மாற்றங்களை மேற்கொண்டுள் ளேன்.

வியாபாரம் இன்மையாலேயே இவற்றை மூடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. பல கிராமங்களில் தனியார் வியாபார நிலையங்கள் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சங்கக் கிளைகளின் சில முகாமையாளர்கள் பொதுமக்களுக்குகடன்அடிப்படையில்பொருள்களை கொடுத்துள்ள குற்றச்சாட்டுக்களும் உள்ளன. பல மாவட்டங்களில் வெற்றிகரமாக செயற்படும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் இருக்கும் போது வவுனியா பிரதேசத்திற்குட்பட்ட இடத்தில் மட்டும் பணக் கையாடல் இடம்பெறுவது தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும். அத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் இவ்வாறு சங்கங்களின் கிளைகள் மூடப்படுவதற்கு காரணமாகின்றது. – என் றார். (ம-21)

# கண்ணிவெடியற்ற இலங்கைக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்

### இலங்கைக்கான கனேடியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.7

கண்ணி வெடிகளிலிருந்து விடுதலை பெற்ற உலகையும் – இலங்கையையும் உருவாக்கும் இணைந்த இலக்கில் எதிர்வரும் மாதங்களிலும் வருடங்களிலும் இலங்கையுடன் இணைந்து தொடர்ந்து செயலாற்ற எதிர்பார்த்துள்ளோம் என்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெல்லி விற்றிங் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்தில் நிலக்கண்ணி வெடி விழிப்புணர்வு மற்றும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு உதவி வழங்கல் தொடர்பான சர்வதேச தினம் தொடர்பான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஒட்டாவோ உடன்படிக்கையின் (கண்ணிவெடி தடை உடன்படிக்கை) அடைவுக்கு மதிப்பளிக்கும் வகையில், செயற்பாடுகளில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புக்கு கனடா வரவேற்பளிக்கின்றது. கண்ணி வெடிகளிலிருந்து விடுதலை பெற்ற உலகையும் – இலங்கையையும் உருவாக்கும் இணைந்த இலக்கில் எதிர்வரும் மாதங்களிலும் வருடங்களிலும் இலங்கையுடன் இணைந்து தொடர்ந்து செயலாற்ற எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாடு மிகவும் முக்கியமானது. அனைத்து இலங்கையர்களுக்குமான நீடித்த சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கு நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவது அத்தியாவசியமானதாகவுள்ளது. இலங்கையின் நல்லிணக்க மற்றும் மீள்குடியமர்த்தல் திட்டங்களுக்கும் அது முக்கியமானதாகவுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவது இலங்கையின் பொருளாதார மீட்பு, வாழ்வாதாரம், வறுமை தணிப்பு என்பவற்றுக்கு உடனடியாகவும் நீண்டகால அளவிலும் ஆதரவளிப்பதாக உள்ளது. கண்ணிவெடிகளுக்கு தடை விதிக்கும் ஒட்டாவோ உடன்படிக்கை 17 வருடங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து கனடா உலகளாவிய ரீதியில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைக்கு 400 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதியைப் பங்களிப்புச் செய்துள்ளது.– என்றார். (ம-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்காத நிதி நடவடிக்கைகள் மோசடியே

## யாழ். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எந்தவொரு நிதிக் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கையின் போதும் மக்களுக்கு பற்றுச் சீட்டு வழங்க வேண்டும். அவ்வாறு பற்றுச்சீட்டு வழங்காது மேற்கொள்ளப்படும் எந்த நிதி நடவடிக்கையும் மோசடியாகவே கருதப்படும். எனவே உத்தியோகத்தர்கள் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.- இவ்வாறு யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் எஸ்.செந்தூரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் வருடா வருடம் சித்திரைப் புத்தாண்டு சேமிப்புக் காலத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
முப்பது வருடப் போரால் பாதிக்கப்பட்டு வீடு,வாசல்,தொழிலை இழந்து பல இன்னல்களை அனுபவித்த மக்களை சேமிப்புப் போட்டி காரணமாக, மேலும் நெருக்கடிக்குள் தள்ள வேண்டாம். சமுர்த்தி திட்டத்தில், சமுர்த்தி வங்கிகள், வறிய மக்களுக்கு சேவைகளை வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மேம்படுத்தவே உருவாக்கப்பட்டன. தங்களுக்குள்ளே போட்டித் தன்மையை ஏற்படுத்திக் கொண்டு, ஏனைய வணிக வங்கிகள் இலாபம் உழைப்பது போன்று செயற்படுவதற்காக எமது வங்கிகள் உருவாக்கப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் சில சமுர்த்தி வங்கிகள், புத்தாண்டு சேமிப்புக் காலத்தில், கடன்களை மக்களுக்கு வழங்கி அதனை சேமிப்பு கணக்குகளுக்கு வைப்பிலிடுமாறு வற்புறுத்தும் நடவடிக்கைகளுக்கு எமது உத்தியோகத்தர்கள் ஒருபோதும் துணை போகக் கூடாது. எமது உத்தியோகத்தர்கள் எந்தவொரு நிதிக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையின் போதும் மக்களுக்கு பற்றுச் சீட்டை வழங்க வேண்டும். பற்றுச் சீட்டு வழங்காது மேற்கொள்ளப்படும் எந்தவொரு நிதி நடவடிக்கையும் மோசடியாகவே கருதப்படும். எனவே உத்தியோகத்தர்கள் இவ்வாறான செயற்பாட்டைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எந்தவொரு அதிகாரியும், தான் பாராட்டுப் பெறும் நோக்கில், தங்களின் இலக்குகளை வழங்கி சேமிக்கும்படி மக்களை வற்புறுத்தினால் அதனை எமது சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வர முடியும். அதனை எமது சங்கம் அரச அதிபரின் மேலதிக நடவடிக்கைக்காக முன்னிலைப் படுத்தும் – என்றுள்ளது.(ற-ரி2)

## தொழில்திறன் கண்காட்சி

வரணி, ஏப்.6
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கொடிகாமத்தில் தொழிற்றிறன் கண்காட்சி ஒன்று கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கொடிகாமம் தையல் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுவைபவ ரீதியாகக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.பஞ்சலிங்கம், பிரதேச கிராம உத்தியோகத்தர் கு.பரமானந்தம், கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு, ஓய்வுநிலை உபதபால் அத்தியட்சகர் க.ஞானலிங்கம் மற்றும் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை வழங்கினர்.

நிகழ்வில் வரவேற்பு நடனம், குழு நடனம் மற்றும் மணப்பெண் அலங்காரக் காட்சி என்பவை இடம்பெற்றதுடன், பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தையல் பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட பல உடுபுடைவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ற-122)

## ஒட்டுசுட்டானில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு

முல்லைத்தீவு. ஏப்.7
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வீடுகளில் சுகாதார பிரிவினர், பொலிஸார் திடீர் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

தற்போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரத்திணைக்களங்களுக்கு உட்பட்ட சுகாதார அதிகாரிகள் தங்கள் பிரிவிற்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று டெங்கு நுளம்பு பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று பரிசோதித்தும் அவ்வாறு இருந்தால் அதை அழிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பலபகுதிகளில் இதுபோன்ற செயற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில், முல்லைத்தீவு ஒட்டு சுட்டானிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீடுகளில் அக்கறையின்றிப் போடப்படும் கழிவுகள், குப்பைகூளங்களாலும், தேவையற்ற இடத்தில் நீர் தேங்கி இருப்பதாலும் நுளம்புகள் பரவ ஏதுவாக உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அறிவுறுத்தல்கள் வழங்கும் ஒட்டு சுட்டான் பிரதேச சுகாதார பிரிவினர், தண்டப்பணமும் அறவிட்டு வருகின்றனர். (ற-500)

## கைநூல், இறுவட்டு வெளியீட்டு விழா

அச்சுவேலி, ஏப்.7
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பும் அமைச்சின் முதியோருக்கான தேசிய செயலகம் நாடளாவிய ரீதியில் முதியோரின் பயன்பாட்டுக்கு முதியோருக்கான உடற்பயிற்சி கைநூல் மற்றும் இறுவட்டை வெளியிடுகின்றது.

வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு செத்சிறிபாயா 2 ஆவது கட்டடத்தின் 11 ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பும் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில், பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் அமைச்சின் செயலாளர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நாடளாவிய ரீதியில் செயற்படும் மாவட்ட முதியோர் சங்கங்களின் நிர்வாகிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.(ற-11)

## கிளி. வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு இரத்து

### மத்திய அரசின் தலையீட்டை அடுத்து

யாழ்ப்பாணம், ஏப்.7
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு பதில் பணிப்பாளரொருவரைத் தேர்வு செய்வதற்கு, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் நேற்றுநடத்தப்பட விருந்த நேர்முகத் தேர்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் தலையீட்டாலேயே இது இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பதில் பணிப்பாளரை, மத்திய அரசு நியமனம் செய்யவில்லை. அதனால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தகுதி அடிப்படையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குப் பதில் பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்திருந்தது. கிளிநொச்சி வைத்தியசாலையில் குழந்தைகள் வைத்திய நிபுணராகக் கடமையாற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். மாவட்ட வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர், சிறப்பாக கடமையாற்றுவதாக, மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குப் பதில் பணிப்பாளராக தமிழ் மொழியில் பரிச்சயமான ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில் பதில் பணிப்பாளரைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வு நேற்று இடம் பெறவிருந்தது. இருப்பினும் மத்திய அரசின் தலையீட்டால் அது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு, மத்திய அரசு மேற்கொள்ள வேண்டிய நியமனங்களை மாகாண அரசு மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டதற்கு அமையவே குறித்த தேர்வு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ற-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்க ஏற்பாடுகள் பூர்த்தி

## வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் சூரியராஜா தெரிவிப்பு

வவுனியா. ஏப்.7
நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள வெப்பமான காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் குடி தண்ணீருக்கு தட்டுபாடு ஏற்பட்டால் மக்களுக்கான குடி தண்ணீர் வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளோம் என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

> கிராம சேவகர்கள் ஊடாக நீர்த் தாங்கிகளை விநியோகிப்பதற்குத் தயாராகவுள்ளோம். குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அந்தந்தப் பகுதிகளின் கிராமசேவகர்கள் ஊடாக பிரதேச செயலரின் பரிந்துரையுடன் எமக்கு கோரிக்கை முன்வைத்தால் குடி தண்ணீர் விநியோகிக்கப்படும்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியக் குளம், இறம்பைக் குளம், கனகராயன்குளம், மாமடுகுளம், பட்டானிச்சூர்குளம், நெளுக்குளம் உட்படப் பல்வேறு குளங்களின் நீர்மட்டம் நாளாந்தம் குறைவடைந்து வருகின்றது. அத்துடன் அந்தக் குளங்களை அண்மித்துள்ள வீடுகளின் கிணறுகளிலும் நீர்மட்டம் குறைவடைந்து வருகிறது. எதிர் வரும் வாரங்களில்மழை பெய்யத் தவறினால், சிறுபோகச் செய்கை பாதிப்புக்குஉள்ளாகும்.

இதேவேளை - குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது என்று மக்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் கேட்டபோதே பணிப்பாளர் மேற் கண்டவாறு பதிலளித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது, இந்த வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் சூரியவெப்பம் அதிகரித்துள்ளது என்பதை அறியமுடிகிறது. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை, குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அந்தந்தக் கிராமங்களில் கிராம சேவகர்கள் ஊடாக நீர்த் தாங்கிகளை விநியோகிப்பதற்குத் தயாராகவுள்ளோம். குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அந்தந்தப் பகுதிகளின் கிராம சேவகர்கள் ஊடாக பிரதேச செயலரின் பரிந்துரையுடன் எமக்கு கோரிக்கை முன்வைத்தால் நாம் குடிதண்ணீர் வழங்குவோம் - என்றார். (ற-402)

## மணற்காடு சவுக்குக் காட்டில் பற்றிய தீயால் 4 ஏக்கர் நாசம்

யாழ்ப்பாணம், ஏப்.7
மணற்காடு பிரதேசத்திலுள்ள சவுக்குமரக் காட்டில் தீ மூண்டதில் சுமார் 4 ஏக்கர் பகுதியில் வளர்ந்திருந்த சவுக்கு மரங்கள் தீயில்எரிந்துள்ளன. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்ததாவது:-

மணற்காட்டிலுள்ள சவுக்குமரத் தோப்பில் இரவு 7 மணியளவில் தீ மூண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினர் அங்கு வருகை தந்த போதும் காட்டின் நடுப்பகுதியில் சென்று மூண்ட தீயைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. அதனால் மேலதிக நிலப்பரப்புக்கு தீ பரவுவதைத் தடுக்கும் வகையில் காய்ந்த இலைச் சருகுகள் மற்றும் விறகுகள் பொதுமக்கள், பொலிஸார், இராணுவத்தினரின் உதவியுடன் அகற்றப்பட்டு மணல்அணைகள் போடப்பட்ட தால் இரவு 10 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது- என்றார்.

தீ மூண்டதற்கான காரணம் புகை பிடிப்பவர்களின் அசமந்தத்தால் நடந்திருக்கலாம் அல்லது, விறகுத் தேவைக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ சிலரால் தீ மூட்டப்பட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஐ-422)

## மலசலகூட வசதி, குடிதண்ணீர் இன்மையால் சங்கானை சந்தை வர்த்தகர்கள் சிரமம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.7
வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை சந்தைப் பகுதியில் மலசலகூட வசதி, குடி தண்ணீர் என்பவை உரிய சுகா தாரத்துடன் பேணப்படவில்லை என்று வர்த்தர்கள் வடமாகாண முதலமைச்சரி டம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நீண்டகாலமாக மூடிக்கிடந்த கிணறு தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. ஒன்றரை வருட காலமாக மூடிக்கிடந்த இந்தக் கிணறு துப்புரவு செய்யப்படாமல் உள்ளது. எனினும் அந்த நீரையே பாவனைக்கு உட்படுத்துமாறு பிரதேச சபையினர் கூறுகின்றனர். அத்துடன் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தாங்கியிலும் சீராக நீர் விநியோகம் இடம்பெறுவதில்லை. நிரப்பப்படும் நீரும் குடிப்பதற்கு ஏற்ற தன்மையுடன் இல்லை. எனவே அவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட பொது மலசலகூடம் எட்டு மாதங்களுக்கு மேலாக பாவனைக்கு வழங்கப்படாமல் உள்ளது. சங்கானை சந்தைப் பகுதியை வட மாகாண சுகாதார அமைச்சரும், வட மாகாண முதலமைச்சரும் வந்து பார்வையிட்டுஉரியதீர்வைப்பெற்றுத்தரவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வலி.மேற்கு பிரதேச செயலகத்தினரிடம் கேட்டபோது;
குடி தண்ணீர் விடயம் தொடர்பாக எமக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும் இது குறித்துக் கவனம் எடுக்கப்படும். வேள்ட் விஷன் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்த பொது மலசலகூடத்தில் வேலைகள் இன்னமும் முழுமையாக முடிவடையவில்லை. சிறு சிறு வேலைகள் செய்யப்பட்டுவருகின்றன. அவை அனைத்தும் முடிவடைந்த பின்னர், இரண்டு வார காலப் பகுதிக்குள் மலசலகூடங்கள் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்படும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ற-ரி5)

## கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு இரண்டு மாத கடூழியச் சிறை

கிளிநொச்சி, ஏப்.7
கசிப்பு மற்றும் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு வேறு குற்றவாளிகளுக்கு தலா இரண்டு மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், முறையே ஒரு லட்சம் மற்றும் 2 லட்சம் ரூபா அபராதமும் விதித்து, தீர்ப்பு வழங்கியது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட போதைப் பொருள்கள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, தருமபுரம் பகுதியில் மறைந்திருந்த பொலிஸார் காட்டுப் பகுதிக்குள் இருந்து வந்த மோட்டார் சைக்கிளொன்றை மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் பின்புறம் இருந்த பரலுக்குள் 40 போத்தல் கசிப்பு இருந்தமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து இரு மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும், ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

அத்துடன் இரணைமடுப் பகுதியில் உள்ள வீடொன்றில் விசேட போதைப் பொருள்கள் தடுப்புப் பிரிவினர் நடத்திய திடீர் சோதனையின் போது கசிப்பு உற்பத்திக்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த கோடாவும் உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கிளிநொச்சி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து 2 லட்சம் ரூபா அபராதமும் இரண்டுமாத கடூழியச் சிறைத் தண்டனையும் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## பல இடங்களில் இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஏப். 7
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமைகாலை8.30மணியிலிருந்துமாலை5.30மணி வரை யாழ். பிரதேசத்தில் காரைநகர்சிவன்கோயில், கசூரினா கடற்கரை, மாப்பாணபுரி, இலகடி, சயம்பு வீதி, மல்லிகை ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் கூளாமுறிப்பிலும், வவுனியா பிரதேசத்தில்சாம்பல்தோட்டம் கிராமத்திலும், மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங் காலை நீர்ப்பாசனத் திணைக் களம், [illegible] அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டியம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ரி)

## பெருந் திருவிழா

சாவகச்சேரி, ஏப்.7
சாவகச்சேரி, சங்கத்தானை, இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா எதிர் வரும் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

கொடிச்சேலையை வழமை போல சங்கத்தானை ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர் ஊர்வலமாக எடுத்துச் சென்று, வழங்கிய பின்னர் மு.ப. 11மணிக்கு கொடியேற்றம் இடம் பெறும்.

ஏப்ரல் 20 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-9)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஏப்.7
நெடுந்தீவின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவரும், முன்னாள் தீவக வலய கல்விப் பணிப்பாளரும், அதிபருமான அமரர் இரா. சின்னத்தம்பியின் நினைவாக நடத்தப்படும் நினைவுரைப் பேருரை நிகழ்வு, எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு பணை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் வ.மகேஸ் வரன் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (ற-17)

## வீடு புகுந்து தாக்கிய இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.7
இரவுநேரம் அத்துமீறி வீடொன்றுக்குள் நுழைந்து பொருள்களை அடித்து நொறுக்கி சேதமாக்கியதுடன் அங்கிருந் தவர்களையும் அடித்து தாக்கிய தாகக் குற்றஞ் சாட்டப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கொழும்புத்துறையில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. குருநகர் பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 28 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். ஊடுருவலைத் தடுக்க கடும் கண்காணிப்புக்கள்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7
இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் தலைதூக்குவதைத் தடுப்பதற்காக ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதம் செயற்படுகின்ற வெளிநாடுகளிலிருந்து நாடுதிரும்புவோர் மற்றும் உள்நாட்டில் இனங்காணப்பட்டுள்ள கடும் போக்காளர்களின் குடிவரவு - குடியகல்வு செயற்பாடுகளைத் தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்னாயக்க தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்பில் சர்வதேசபுலனாய்வு அமைப்புகளுடன் தொடர்பில் இருக்கின்றோம் என்று குறிப்பிட்ட அமைச்சர் சாகல, உள்நாட்டில் கடும் போக்குக் கருத்துகள் வெளியாகும் இடங்கள், சொற்பொழிவுகள் ஆற்றுவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினாவின்போது ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் சாகல மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-5)

# நல்லிணக்கத்தின் பெயரால் தமிழீழத்துக்கான அடித்தளம்

## சாடுகின்றார் குணதாஸ அமரசேகர



கொழும்பு, ஏப்.7
யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் குடியேறுவதற்கு வடக்கு முதலமைச்சர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். ஆனால், தெற்கில் தமிழர்கள் குடியேறுவதைச் சிங்களவர்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர, நல்லிணக்கத்தின் பெயரால் தமிழீழத்துக்கான பின்னணி உருவாக்கப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஆட்சிமாற்றத்தின் பின்னர் 12 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது. அதன் விளைவாகவே இன்று சாவகச்சேரியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த விடயம் பெரிதாகப் பேசப்பட்டாலும், இது போன்று யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் வெடி பொருள்கள் இருக்கலாம். அது தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்தவில்லை.

இந்த வெடிபொருள்கள் மீட்பு சம்பவத்தின் போது நாட்டில் புலிகள் இல்லை. ஆனால் புலிகள் போன்ற வேறு குழுக்கள் உருவாக இது அடித்தளமாக அமையும். திருகோணமலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் புலிகள் இல்லாத நிலையில் எமது போராட்ட வடிவங்கள் மாற்றம் பெற்றுள்ளன. தனி நாடு வேண்டும் என்பதே எமது இறுதி இலக்கு என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இவர்கள் இவ்வாறு பிரிவினைவாதம் தான் தமது நோக்கம் என்பதை வெளிப்படுத்திய பின்பும், நல்லாட்சி அரசு அவர்களை வலுப்படுத்த முனைகின்றது. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் குடியேறுவதற்கு வடக்கு முதலமைச்சர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். ஆனால் தெற்கில் தமிழர்களை குடியேறுவதைச் சிங்களவர்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை.

மத்திய அரசினதும், மாகாண சபைகளினதும் சட்டதிட்டங்களில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு வருகின்றது. அதன் கீழ் வடக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் மற்றும் முழுமையான நிதி கையாளுகை பலம் எனபன வழங்கப்படவுள்ளன. இது பிரிவினைவாதிகளை அதிகாரபூர்வமாக வலுப்படுத்தும் செயற்பாடாகவே அமையும். ஒருபோதும் வடக்கு மக்களோ அல்லது தெற்கின் சிங்கள மக்களோ ஆயுத கலாசாரத்தை விரும்பவில்லை. ஆனால் அரசியல்வாதிகளுக்கு ஆயுத கலாசாரத்தை மீண்டும் ஏற்படுத்தும் தேவை உள்ளது - என்றார். (ந-5)




# மகிந்தவுக்கு பொலிஸ் பாதுகாப்பு; அதிருப்தி வெளியிடுகிறார் நாமல்

கொழும்பு, ஏப். 7
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த இராணுவத்தினர், அந்தப் பணியில் இருந்து நீக்கப்பட்டதையடுத்து, அவரது பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

> மகிந்த ராஜபக்சவுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த 50க்கும் அதிகமான இராணுவத்தினரை, அந்தப் பணியில் இருந்து நீங்குமாறு இராணுவத் தலைமையகம் அறிவித்திருந்தது.

மகிந்த ராஜபக்சவுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த 50க்கும் அதிகமான இராணுவத்தினரை, அந்தப் பணியில் இருந்து நீங்குமாறு இராணுவத் தலைமையகம் அறிவித்திருந்தது. அதற்குப் பதிலாக, பொலிஸார் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மகிந்த ராஜபக்சவுக்கு அறிவிக்கப்பட்டது.

அரசின் இந்த முடிவு குறித்து நாமல் ராஜபக்ச அதிருப்தி வெளியிட்டுள்ளார். மோசமான தீவிரவாதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த, தலைவரான மகிந்த ராஜபக்சவுக்கு அளிக்கப்பட்டு வந்த இராணுவப் பாதுகாப்பை நீக்கியதை அரசு எவ்வாறு நியாயப்படுத்தும்? என்று அவர் டுவிட்டரில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவுக்கான இராணுவப் பாதுகாப்புவிலக்கப்பட்டமைகுறித்து, கருத்து எதையும் வெளியிட பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அனைத்து முக்கிய பிரமுகர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்த இராணுவப் பாதுகாப்பை நீக்கி, பொலிஸாரை பாதுகாப்பில் ஈடுபடுத்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், இதனால் பாதுகாப்புக்குளந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ட் சிற்றிக்கான பரிந்துரைகளை ஏற்பதற்கு சீன நிறுவனம் இணக்கம்

கொழும்பு, ஏப்.7
கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக, கடலோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தால், பரிந்துரைக்கப்பட்ட 70 நிபந்தனைகளுக்கு, சீன நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
கடுமையான சுற்றுச்சூழல் நிபந்தனைகளின் கீழ், கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு, சீன நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய் 46 ஆயிரம் சதுர மீற்றர் பிரதேசம் ஆள்கள் நுழைவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
புவிநிலைகாட்டி (ஜிபிஎஸ்) கருவிகளின் உதவியுடன் இந்தப் பகுதி கண்காணிக்கப்படும் என்றும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# இந்திய மீனவர்களின் படகுகள் ஒருபோதும் விடுவிக்கப்படா

## அமைச்சர் மகிந்த அமரவீர திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 7
கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள். ஆனால் படகுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுவிக்கப்பட மாட்டா. தமிழக அரசியல்வாதிகளின் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் நாம் அடிபணியப் போவதில்லை.- இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவரது அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன ஆட்சியில் இருக்கும் வரை நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கமாட்டார். அத்தோடு மீண்டுமொரு பயங்கரவாதம் தலைதூக்குவதைத் தமிழ் மக்களும் விரும்பவில்லை. அதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவும் இல்லை. தமிழ் மக்களுக்கு மீண்டுமொரு ஆயுதக்கலாசாரம் அவசியமில்லை. நான் அடிக்கடி யாழ்ப்பாணம் செல்கிறேன். இதனால் அங்குள்ள மக்களின் நிலைமைகளை நான் நன்கறிவேன்.
அதேவேளை தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியமாட்டோம். மீனவர்களை விடுதலை செய்வோம். இந்திய மத்திய அரசுடனேயே எமது தொடர்புகள் பேணப்படுகின்றன.
இதற்கமைய பரஸ்பர இணக்கப்பாட்டின் கீழ் இந்திய மீனவர்கள் 99 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர். அதேபோன்று இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்படவுள்ளனர்.
ஆனால், ஒருபோதும் இந்திய மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகுகள், உபகரணங்கள், வலைகள் மீளக் கையளிக்கப்படமாட்டாது.
பருத்தித்துறையில் பெரிய மீன்பிடித்துறைமுகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. காரைநகர் மற்றும் குருநகரிலும் மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன. அது மட்டுமல்லாது முல்லைத்தீவிலுள்ள மீனவர்களுக்கு இந்திய அரசின் உதவியுடன் 150 படகுகள் வழங்கப் பட்டன.
இன்னமும் இரண்டொரு மாதங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்படவுள்ளது. ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையும் கிடைக்கவுள்ளது - என்றார். (ந-5)

> தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடி பணியமாட்டோம். மீனவர்களை விடுதலை செய்வோம். இந்திய மத்திய அரசுடனேயே எமது தொடர்புகள் பேணப்படுகின்றன.

# ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றம்

கொழும்பு, ஏப்.7
ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்தே இந்த மாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.
கட்சியின் இரண்டாம் தலைமைத்துவங்களுக்கு மத்தியில் உள்ள அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும், கட்சியின் தலைமைகளை மக்கள் எளிதில் அணுகுவதற்கும், கட்சியின் எதிர்காலம் தொடர்பான நோக்கோடு கட்சியின் உயர் பதவிகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று அண்மையில் ஐ.தே.கவின் உயர்பீடம் அறிவித்திருந்தது.
அதன் அடிப்படையில் கட்சியின் மத்திய செயற்குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கூடியது. இதில் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.
இந்தக் கூட்டத்தில் கட்சியின் எதிர்காலம் பற்றி தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் ஐ.தே.கவின் செல்வாக்கை நிலைநிறுத்த இரண்டாம் தலைமுறையினருக்கு தலைமைத்துவ அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து பல்வேறு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
ஐ.தே.கவின் தேசிய ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றிவந்த ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே, அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, கட்சியின் சிரேஷ்ட பிரதித் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவராகவும், ஹரின் பெர்னாண்டோ, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
கட்சியின் தேசிய இளைஞர் முன்னணியின் தலைவராக கவிந்த ஜயவர்தனவும், பெண்கள் முன்னணியின் தலைவராக பிரதி அமைச்சர் அனோமா கமகேவும், அரச சேவைகள் தொழிற்சங்கத் தலைவராக சுஜீவ சேனசிங்கவும், கல்வி தொழிற் சங்கத்தின் தலைவராக அஜித் பி பெரேராவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-5)

# பசிலின் மனைவியிடமும் விசாரணை

கொழும்பு, ஏப்.7
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் மனைவி புஸ்பா ராஜபக்சவை, பெரும் நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின்முன் இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கமநெகும திட்டத்தில் 15 கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டமை குறித்து இவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.
உள்ளக விமானப் பயணங்களுக்காக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பயணங்கள் தொடர்பிலும், பணம் செலவழிக்கப்பட்ட விதம் தொடர்பிலும் புஸ்பா ராஜபக்சவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது. புஸ்பா ராஜபக்ச, கணவர் பசில் மற்றும் பிள்ளைகளுடன் பல தடவைகள் உள்நாட்டு விமானப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
அதேவேளை, பெரும் நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச, கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (5)

# தாஜுதீன் கொலையில் இருவருக்குத் தொடர்பு

கொழும்பு, ஏப்.7
பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலையுடன் இரண்டு பேருக்கு நேரடித் தொடர்பு காணப்படுகின்றது என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர்.
விசாரணைகளின்மூலம் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
ஏனைய சந்தேகநபர்களின் தொடர்புகள் குறித்து ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

# அச்சுறுத்தல் குறித்து சாட்சியமளித்தால் எம்.பிக்களுக்கு அசௌகரியம் ஏற்படும்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 7
ஒன்றிணைந்த எதிர்க் கட்சியை நாடாளுமன்றத்தில் சுயாதீனக் குழுவாக அங்கீகரிக்குமாறு தொலைபேசி மூலம் தமக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து சாட்சியமளித்தால், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிடும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒன்றிணைந்த எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுக்குப் பதிலளித்த போதே சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டார்.
ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய வாசுதேவ நாணயக்கார- சபாநாயகருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையானது, சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்குச் சமமானது என்பதால், இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைப் பிரச்சினையாகக் கருதி, இது தொடர்பான விசாரணையை நிறைவு செய்து அறிவித்தலொன்றை விடுக்குமாறு கோரினார்.
இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, இந்தச் சம்பவம் தொடர்பில் நான் இன்னமும் எனது விவரங்களை வழங்கவில்லை. எனினும், நான் சாட்சியளித்தால் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்தையும் கூறவேண்டிவரும். அப்படியென்றால், நாம் பலரும் அதில் அசௌகரியத்துக்கு உள்ளாவோம். இதில் நான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. எனினும், பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும், நான் விவரங்களை வழங்கும்வரை வேறு விசாரணைகளை நடத்த முடியாது. நான் சாட்சியளித்தால், அச்சுறுத்தலுக்கான ஆரம்ப சந்தர்ப்பத்தைக் கூறவேண்டிவரும், அதில் எனது சகோதர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கூறப்பட்ட விடயங்களையும் கூறவேண்டி வரும். ஆகவே, இதில் தலையிட்டு அநாவசியமான விடயங்களை ஏற்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. என்னால் இதை மறக்க முடியும்- என்று கூறினார்.
இருப்பினும், இந்த அச்சுறுத்தல் தொடர்பான குற்றச்சாட்டானது தங்களுக்கு (ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர்) எதிரானதாகவே எடுத்துக் காட்டப்பட்டிருந்ததாகவும், ஆகவே, இதை விசாரித்து நிறைவு செய்யுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ மீண்டும் சபாநாயகரை வலியுறுத்தினார். எனினும், இந்த விடயத்தில் தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் குற்றஞ்சாட்டியிருக்கவில்லை என்று சபாநாயகர் தெரிவித்தார். (ந-5)

# ரணில், மகிந்த முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஏப்.7
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள பிரதமர் அலுவலகத்திலேயே இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் சுமார் 20 நிமிடங்கள் நடைபெற்றுள்ளது.
நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பு வழங்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என்று அறியமுடிகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும், பிரதமர் ரணிலுடன் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (ந-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் காணிகள் அபகரிப்பு; என்ன சொல்லப் போகிறது அரசு...?

வடக்கு மாகாணத்தில், மகிந்தவின் ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட, 69 ஆயிரத்து 992 ஏக்கர் நிலப் பரப்பில், ஆக 2 ஆயிரத்து 565.5 ஏக்கர் காணியையே, புதிய மைத்திரி (நல்லாட்சி) அரசு விடுவித்துள்ளது!

மேற்போந்த களநிலையை (உலக அரசுகளிடம்) முன்வைத்துள்ளது, பிரிட்டனில் இயங்கும் தமிழர் பேரவை. ஈழத்தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட, கையகப் படுத்தப்பட்ட, காணிகளில் வெறும் 3.6 சதவீதமே திரும்ப ஒப்படைக்கப்பட்டன என்ற கணிதத்தையும், இலங்கைக்கு உதவும் நாடுகளுக்குத் தமிழர் பேரவை புட்டுக் காட்டி உள்ளது.

புதிய அரசு சாதித்தவற்றில், அனைத்துலக நாடுகளை ஏமாற்றியதற்கான சான்றாதாரமே இது. வடக்கு மாகாணத்தில் மட்டும், பன்னிரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு, இலங்கை இராணுவத்தால் அபகரிக்கப் பட்டதாக, மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் புள்ளி விவரம் தெட்டத் தெளிவாகத் தெரிவிப்பதாகவும் தமிழர் பேரவை குத்திக் காட்டி உள்ளது.

மேற்போந்த தகவல்களை, புதிய அரசு மழுப்பிச் சளப்ப இயலாத வகையில் புட்டுக்காட்டிய பிரிட்டன் தமிழர் பேரவை, இலங்கை அரசுகளால், அவற்றின் ஏமாற்றுக் கதைகளால் பூசி மெழுகுவதற்கு இடமில்லை, வாய்ப்பில்லை என்பதையும் பூடகமாக எடுத்தியம்பி உள்ளது.

அத்தோடு, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தில், இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம், அதனைக் கௌரவிக்கும் விதத்தில்-வகையில்-தமிழர் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் எனவும் பிரிட்டன் தமிழர் பேரவை வலியுறுத்தி உள்ளது.

இதேவேளை--

தமிழ் மக்களின் காணிகள், இலங்கை அரசுகளால் அபகரிக்கப்பட்டதை, பூசி மெழுகும், வாய்ப்பந்தல் போடும் தடத்திலேயே, மகிந்த அரசும் சரி, மைத்திரி அரசும் சரி முறையே செயற்பட்டது, செயற்படுகிறது.

உள்ளதைச் சொல்லப்புகின்--

தமிழ் மக்களின் நிலங்களை, பூர்வீகக் காணிகளை, விடுவித்துவிட்டதாக--இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கர் காணிகளை விடுவிப்பது போன்ற கணக்குக் காட்டுதல் "தந்திரமும்" அரச தரப்பில் மேலுயர்ந்து இருந்தமை இங்கே அழுத்திக் காட்டப்பட வேண்டியதாகும். மேலோட்டமாகப் பார்த்தால் அதிக எண்ணிக்கையான தமிழர் நிலங்கள்--காணிகள்--விடுவிக்கப்பட்டதாக ஒரு மாயத் தோற்றம் காட்டப்பட்டதை உணர முடிகிறது.

இத்தகைய ஒரு தந்திரம் நிறைந்த சூழமைவில், தமிழர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளில், மூன்று தசம் ஆறு வீதமானவை மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளன என்ற தகவலைக் கண்டு, இலங்கை அரசின் இப்போதைய தலைமைத்துவம் என்ன சொல்லுமோ...?!



# தமிழ் நாட்டின் தலைவிதி எவரது கைகளில்?

சேரலாதன்

தமிழ் நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. எவராலுமே சரியாகக் கணிப்பிட முடியாத வகையில் கட்சிகளின் வெற்றி வாய்ப்பு இழுபறியான நிலையில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.முக. கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க, ஆகிய கட்சிகளுக்கு அடுத்த நிலையில் நடிகர் விஜயகாந் தலைமையிலான தே.மு. தி.க காணப்படுகின்றது. தேசியக் கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகியன தமிழ் நாட்டை பொறுத்தமட்டில் பிற கட்சிகளை நம்பியிருக்க வேண்டிய பரிதாபமான நிலையில் உள்ளன. காங்கிரஸ்கட்சி, தி.மு.கவிடம் சரணடைந்துவிட்டது. பா.ஜ.க. கூட்டணி அமைப்பதற்கு வேறு மாநிலக் கடசிகளைத் தேடி வருகின்றது. இந்திய மாநிலங்களைப்பொறுத்தவரையில் மாநில அளவில் மாநிலக்கட்சிகள் செல்வாக்குப் பெற் றுக் காணப்படுகின்றன. தேசியக்கட்சிகள் சில மாநிலங்களில் செல்வாக்குப் பெற்றுவிளங்கினாலும், அதிக மாநிலங்களில் மாநிலக்கட்சிகளை அரவணைத்துச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளன.

> தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க., கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க, ஆகிய கட்சிகளுக்கு அடுத்த நிலையில் நடிகர் விஜயகாந் தலைமையிலான தே.மு.தி.க. காணப் படுகின்றது.

தமிழ்நாட்டில் 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திராவிடக் கட்சிகளே எழுச்சிபெற்றுக் காணப் படுகின்றன. அ.தி.மு.கவும், தி.மு.கவும் மாறி மாறி ஆட்சியில் அமர்ந்து வருகின்றன.

**அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்த தே.மு.தி.க.**

கடந்ததேர்தலில்அ.தி.மு.கவுடன் விஜயகாந்த்தின் தே.மு.தி.க. கூட்டணி அமைத்துப் போட்டியிட்டதால் அந்தக் கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. தி.மு.கவினால் எதிர்க்கட்சியாகக் கூட வர முடியவில்லை. அதனால் விஜயகாந்த்தின் தே.மு.தி.க எதிர்க்கட்சியானது. விஜயகாந்த்தும் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆனால், அவர் எதிர்க்கட்சித் தலைவராக ஆனதாலோ என்னவோ, ஜெயலலிதா அவரை எதிராளியாகவே கருத ஆரம்பித்தார். விஜயகாந்த் கட்சியைச் சேர்ந்த சில சட்டசபை உறுப்பினர்களை விலைக்கு வாங்கவும் அவர் தயங்கவில்லை. இன்று வை.கோ, திருமாளவளவன், இடதுசாரிக் கட்சிகள் அடங்கிய மக்கள் நலக் கூட்டணியில் விஜயகாந்த் ஐக்கியமாகி விட்டார். மொத்தமுள்ள 234 சட்ட சபைத் தொகுதிகளில் 134 தொகுதிகள் விஜயகாந்துக்கு ஒதுக்கப்பட்டதால், அவருக்கு ஏக மகிழ்ச்சி.அத்துடன்முதலமைச்சர் வேட்பாளராகவும் அவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

விஜயகாந்தைக் கடந்த சட்ட சபைத் தேர்தலின்போது நடிகர் வடிவேலு மூலமாக தி.மு.கவே, அவமானப்படுத்தியது. இறுதியில் தி.மு.க. தேர்தலில் படுதோல்வியைத் தழுவ, வடிவேலுவும் பட வாய்ப்பின்றி வீட்டில் முடங்கிக் கிடந்தார். இவ்வளவும் நடந்த பின்னரும் தி.மு.க தலைவர் மு.கருணாநிதி, விஜயகாந்துடன் கூட்டணி அமைத்துக் கொள்ளத் துடித்தார். விஜயகாந்தும் தி.மு.க.வுடன் நெருங்கி வருவதுபோன்று காணப்பட்டார்.

**தற்போது வை.கோ அணியில் விஜயகாந்த்**

ஆனால், கருணாநிதியின் மகிழ்ச்சி அதிக நாள்களுக்கு நிலைக்கவில்லை. இறுதியில் வைகோ அணியுடன் விஜயகாந்த் சங்கமமாகி விட்டார்.

வை.கோ, விஜயகாந்த் ஆகியோர் அமைத்துள்ள கூட்டணியில் பா.ம.க, சீமானின் கட்சி மற்றும் ஏனைய உதிரிக்கட்சிகள் இணைந்து விட்டால் அ.தி.மு.க. பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை உருவாகியிருக்கும். ஆனால் அத்தகைய நிலை இன்னமும் உருவாகவில்லை.

**விசித்திரங்கள் நிறைந்த தேர்தல்களம்**

ஆக மொத்தத்தில் பார்க்கும் போது தமிழ்நாடு அரசியல்களம் என்றுமே இல்லாத அளவுக்குதற்போது விசித்திரங்கள் நிறைந்து காணப்படுகின்றது. ஜெயலலிதா மீதான வழக்கின் தீர்ப்பும், கடந்த வெள்ளப் பேரிடரின் போது ஏற்பட்ட கடும் பாதிப்புக்களும் தேர்தலில் திருப்பங்களை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இதயங்களை வெல்ல முடியாத மகிந்த ராஜபக்ச

மு.ஈழத்தமிழ்மணி

எவ்வளவு செய்தாலும் தமிழர்களின் இதயங்களை வெல்ல என்னால் முடியவில்லை என்ற உண்மையை மலையக மக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ச வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரையில் ஆட்சிபுரிந்த சிங்களத் தலைவர்களால் தமிழர்களின் இதயங்களில் இடம்பிடிக்க முடியவில்லை. சிங்கள ஆட்சியாளர்களைத் தமிழ் மக்கள் பூரணமாக அங்கீகரிக்கவுமில்லை. மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களை நொந்து கொள்வதனால் மகிந்த மீது எந்தவொரு தமிழரும் அனுதாபப்படப் போவதுமில்லை. சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் மகிந்தவின் ஆட்சிக்காலம் முடியும் வரை ஈழத்தமிழர்களின் அரசியலுரிமைகள் யாவும் படிப்படியாகப் பறிக்கப்பட்டு அவர்களின் ஆயுதப் போராட்டமும் முள்ளிவாய்க்காலுடன் தோற்கடிக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்களின் உரிமைகளைத் திட்டமிட்டுப் பறிப்பதிலும், தமிழ் இனத்தைக் கருவோடு அழிப்பதிலும் முதற்பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் மகிந்த ராஜபக்ச வரை போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்ட வரலாறுகள் பலவுண்டு. தமிழ்த் தலைமைகளை ஏமாற்றிய வரலாறுகளும் சிங்கள ஆட்சியாளருக்கு சாதாரணமான விடயங்களாகும்.

தமிழ் மக்கள் மீது இன அழிப்புக்களை முன்னெடுத்து, போர்குற்றத்தைப் புரிந்த மகிந்த அரசு மீது தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் வெறுப்புக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். மகிந்த ராஜபக்ச மீது வார்த்தைகளால் கூறமுடியாதவாறு காழ்ப்புணர்வு தமிழ் மக்களுக்கு இருந்தமையால்தான் அவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டும், அதில் வெற்றிபெறமுடியவில்லை. முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரில் தமிழினத்தை திட்டமிட்டு அழித்து வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ச போருக்குப் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தவொரு வழிமுறைகளையும் மனப்பூர்வமாக முன்வைக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற கொள்கையும் அவரது உள்ளத்தில் இருக்கவில்லை. போரின் வெற்றி நாயகனாகவும் சிங்கள மக்களின் தலைவராகவும் தன்னை உயர்த்திக் காட்டிக் கொண்டவர் அவர்.



### ஒற்றையாட்சிக்குள் தீர்வா?

ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்றனர். தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை..? என்கின்றனர். தமிழ் மக்களுக்கென இந்த நாட்டில் தனியானதொரு தாயகமோ நிலமோ இல்லை என்றும் கூறுகின்றனர். தமிழில் தேசிய கீதம் இசைக்க தமிழ் மக்களுக்கு அனுமதியில்லை. இலங்கை பௌத்தநாடு. சிங்கள நாடு என்ற கோட்பாடுகள் யாவும் மகிந்த ராஜபக்சவினால் தீவிரமாக எழுச்சி பெற்றிருந்தன. போர் முடிவடைந்த பின்னர் 2010 இல் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், கிழக்கு மாகாண சபைத்தேர்தல், 2013இல் நடைபெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தல் என்பவை மகிந்த ஆட்சியில் நாட்டில் நடைபெற் றிருந்தன.

சகல தேர்தல்களிலும் மகிந்தவின் அரசுக்கு துணையாகவிருந்த ஆயுதக் குழுக்களும், அரசசார்புள்ள தமிழ்க்கட்சிகளும், படையினரும் நேரடியான ஆதரவையும் வழங்கியிருந்தனர். தமிழ்மக்கள் தேர்தல் காலங்களில் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டனர். அச்சுறுத்தப்பட்டனர். வேட்பாளர்களும் அச்சுறுத்தப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பரப்புரைகளைமேற்கொள்ள முடியாமல் படையினரால் தடுக்கப்பட்டது. 2009 இல் யாழ்ப்பாண மாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் மகிந்த அரசும் அதன் ஒட்டுக்குழுவான ஈ.பி.டி.பிக் கட்சியும் சேர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியைத்தழுவியது. மாநகர சபைத்தேர்தல் வெற்றி, மகிந்த அரசுக்கு பெரும் சாதனையாக இருந்தது. தமிழ் மக்கள், அரசையும் போர் வெற்றியையும் ஆதரிக்கின்றனர் என்ற போலியான மாயை ஏற்படுத்தப்பட்டது.

> தமிழ் மக்கள் மீது இன அழிப்புக்களை முன்னெடுத்து போர்க் குற்றத்தைப் புரிந்த மகிந்த அரசு மீது தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் வெறுப்புக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

வன்னிப் போரின் போது மகிந்த ஆட்சிக் காலத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல ஆயிரம் பெண்கள் விதவைகளாயினர். பல ஆயிரம்பேர் அங்கவீனர்களாயினர். எண்ணற்ற குழந்தைகள், சிறுவர், சிறுமியர்கள், பெற்றோர்களை இழந்துள்ளனர். காணாமற் போனோர்கள் பற்றிய நிலைப்பாட்டில் மகிந்த தனது ஆட்சிக் காலத்தில் தமிழ்மக்களுக்கு உரிய பதிலை வழங்கவில்லை. இத்தனைக்கும் மாறாக மேலும் மேலும் தமிழ்மக்களை நசுக்கிக் கொண்டேயிருந்தனர்.

மகிந்த ராஜபக்ச தனது ஆட்சியில் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளை தமிழ்த் தலைமைகளோடு கலந்து பேசித் தீர்ப்பேன் என்று சர்வதேச சமூகத்துக்கு பூச்சாண்டி காட்டியிருந்தார். தமிழ் பேசும் மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமேன்றே விரும்புகின்றனர். இதனைத் தமிழ்மக்கள் நம்பி இருந்தனர். மகிந்தவால் தமிழ்மக்களது அடிப்படைப் பிரச்சினை களைக்கூடத் தீர்க்க முடியவில்லை.

### நாட்டில் பௌத்த ஆதிக்கம்

பௌத்த ஆதிக்கத்துக்கும், ஒற்றையாட்சிக்குமே முக்கியத்துவம் கொடுக்கின்ற சிங்களத் தலைவர்கள் வரிசையில் மகிந்த ராஜபக்ச முதன்மையானவராகவே இன்றும் காணப்படுகின்றார்.

## இதுதான் இன்றைய ஜனநாயகம்

இந்த மாதம் 14, 16 ஆம் திகதிகளில் புழுதியாறு குளத்து நீரைத் திறந்து விட்டமை சம்பந்தமான செய்தி உதயனில் வெளியாகி இருந்தது. இந்தக் குளம் அமைக்கப்பட்டதன் நோக்கம், மாயவனூர் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவுமே. இந்தப் பகுதியில் கிணறு வெட்டுவதென்பது சிறிய விடயமல்ல. 30 அடிக்கு மேல் வெட்டினால் மட்டுமே தண்ணீரைக் காணமுடியும். அதுவும் வீட்டுத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யமுடியும். தோட்டச் செய்கைக்கு உதவாது. 2004 ஆம் ஆண்டில் நியாப் திட்டத்தின் கீழ் இந்தக் குளம் அமைக்கப்பட்டபின் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகளில் இருந்து நீரை இறைத்து தோட்டப் பயிர்கள் செய்யக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் குளம் அமைக்கப்பட்டதன் பயனாக இரண்டு மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள கிணறுகளிலும் நீர் வற்றாமல் உள்ளது. 2014 ஆம் ஆண்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் உருவானது. அதுவும் சென்ற வருடம் மட்டுமே செயற்படுத்தப்பட்டது. இந்த வருடம் இற்றைவரை நீர் வழங்குவதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. இவ்வாறான நிலையில் சுமார் மூன்று மைல்களுக்கு அப்பால் சிறுதானியம் செய்பவர்களின் தேவைக்காக இந்தத் தண்ணீர் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் திறந்து விடப்பட்டிருக்கிறது. தண்ணீர் திறக்கும்வரை இந்தப் பகுதி மக்களுக்கு அது குறித்து எதுவும் தெரியாது. இந்தக் குளத்து நீர், எமது வாழ்வாதாரம். எனவே இதைப் பூட்டுவதற்கு முயன்றபோது துருசின் கம்பி வளைக் கப்பட்டு துருசின் மேல் பகுதியும் சேதமாக்கப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது. ஊர் மக்களின் பெரும் பிரயத்தனத்தால் துருசு மூடப்பட்டது. அதிகாரிகளும் வசதி படைத்தவர்களும் எதைச் செய்தாலும் அது நியாயம். வசதியற்றவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயன்றால் அது அநியாயம், விசமத்தனம்; இதுதான் இன்றைய ஜனநாயகம்.

ப.யோகபாதம்

## வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு ஒரு தயவான வேண்டுகோள்

யாழ்.போதனா வைத்தியசாலையின் என்பு முறிவு சத்திர சிகிச்சைப் பிரிவில் பாவனையிலிருந்த 'ஆர்த்திரஸ்கோப்' இயந்திரம் பழுதடைந்த நிலையில் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான கமரா கொள்வனவு செய்யப்படவில்லையெனச் சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக என்பு முறிவு சிகிச்சை நிலையத்தில் குறிப்பிடப்பட்டு வருவதுடன், அதற்கான சத்திர சிகிச்சைகளும் பிற்போடப்பட்டு வருகின்றமை மிகவும் வருந்துதற்குரியது. எனவே நோயாளர் நலனில் அடிபிறழாது அக்கறை கொண்டு நேர்வழியில் செயற்பட்டு வருகின்ற யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஐயா, இந்த நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அந்த உபகரணத்தைக் கொள்வனவு செய்து இதுவரை கிடப்பிலிருக்கும் இந்த நோயாளர்களின் சத்திர சிகிச்சைகளை துரிதப்படுத்தி அவர்களின் சிறப்பான வாழ்வுக்கு வழி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வன்னி மைந்தன்.

## ஆலயங்களில் சினிமாப் பாடல்கள் வேண்டாம்

கோயில்களில் வாசிக்கப்படும் நாதஸ்வர இசையில் திருவிழா நாள்களில் அனேகமாக சினிமா பாடல்களே இசைக்கப்படுகின்றன. தெய்வீகமான இடங்களில் இது தவிர்க்கப்பட வேண்டும். திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ள இந்த மாதத்தில் கோயில்களின் தர்மகர்த்தாக்கள் இது குறித்துக் கவனித்து கோயில்களின் தெய்வீக தன்மை இடம்பெற வைக்க கவனம் செலுத்த வேண்டும். சில கோயில்களிலே ஒலி பெருக்கியில் நாதஸ்வர இசையை ஒலிபரப்பும்போது சினிமாப் பாடல்களும் இடம்பெறுகின்றன. இதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சினிமாப் பாடலுக்கும் கீர்த்தனைக்கும் உள்ள வேறுபாட்டை தர்மகர்த்தாக்கள், கோயில் நிர்வாகிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

அன்பரசன் மட்டுவில் தெற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் நெருக்கடிக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு

## ஆதாரத்துடன் நிரூபணம்

வொசிங்டன், ஏப்.7

ஐ.எஸ். அமைப்பு முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் பண நெருக்கடியைச் சந்தித்துள்ளது என வொஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான வான்வழி கூட்டுப்படைத் தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பின் எண்ணெய்க் கிணறுகளில் மூன்றில் ஒரு பங்கு சேதமடைந்துள்ளன. இதனால் 50 சதவீத வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக ஐ.எஸ். அமைப்பு பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூத்த தளபதிகளுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்குகள், ஊழல்கள், பதவித் துஷ்பிரயோகம், மற்றும் திருட்டுக்கள் என்பவை ஐ.எஸ். அமைப்பை நிலை குலையச் செய்துள்ளன. ஐ.எஸ்ஸுக்கான வருமானம் வீழ்ச்சி அடைந்தமையால், போராளிகளுக்கு சம்பளம் வழங்கத் திணறி வருகின்றனர். இதனால் துல்லியமான தாக்குதல்களை ஐ.எஸ். அமைப்பால் நடத்த முடியவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் போராளிகள் பலருக்குப் பாதிச் சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் சில பகுதியினருக்குச் சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்களினதும், வியாபாரிகளினதும் வரிப் பணத்தில் மட்டுமே ஐ.எஸ் அமைப்பு இயங்கி வருகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தலைமையிலான கூட்டு வான்படை ஐ.எஸ் அமைப்பின் பண ஆதாரங்களைத் திட்டமிட்டு அழித்தது. எண்ணெய்க் கிணறுகள், எண்ணெய்தாங்கிகள், வங்கிகள், களஞ்சியங்கள் என்பவற்றைக் குறிவைத்துத் தாக்கின என அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.



> பெற்றோலியப் பொருள்களை விற்பனை செய்வதிலும், சந்தைப்படுத்துவதிலும் ஐ.எஸ் அமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெற்றோலியப் பொருள்களை விற்பனை செய்வதிலும், சந்தைப் படுத்துவதிலும் ஐ.எஸ். அமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதல் முறையாக நம்பிக்கையான தொனியை நாம் செவி மடுக்கிறோம் எனத் தீவிரவாத நிதியழிப்பு திணைக்களத் துணைத்தலைவர் டானியல் கிலேசர் தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படக் கூடிய செயற்பாட்டை நாம் மேற்கொண்டுள்ளோம். ஆனாலும் இன்னமும் அவர்கள் பெருந்தொகைப் பணத்தை ஈட்டி வருகின்றனர். அவர்களை அழிக்க நாம் நெடுந்தூரம் பயணிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சில காலங்களாக ஐ.எஸ். அமைப்பு தமது நிலப்பகுதியை இழந்து வருகின்றது. கலிபேட் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் 40 சதவீதத்தை அவர்கள் இழந்துள்ளனர். (த-ரி4)

## உயிரிழப்பில் முடிந்தது விஞ்ஞானப் பரிசோதனை



கலிபோர்னியா, ஏப்.7

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை விஞ்ஞானச் சோதனையின் போது ஏற்பட்ட வெடிவிபத்தில் மாணவன் ஒருவன் உயிரிழந்ததுடன், இன்னொரு மாணவன் காயமடைந்துள்ளான் என நேற்று முன்தினம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

18 வயதான பெனாட் மூன் என்ற மாணவன் இந்த விபத்தில் உயிரிழந்தான். சுயமாகத் தயாரித்த ரொக்கட் வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி அவன் உயிரிழந்தான்.

வெடிவிபத்தில் உயிரிழந்த மாணவன், வென்டூரா மாநில விஞ்ஞானப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தான். குறித்த மாதிரி ரொக்கெட்டுடன், கையில் புறப்பேன் வாயு சிலிண்டரையும் இவன் வைத்திருந்தான். இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது எனத் தீயணைப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனாலும் விபத்து எவ்வாறு இடம் பெற்றது என்பது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

## சுட்டு வீழ்த்தப்பட்டது சிரியப் போர் விமானம்

### இஸ்லாமியப் போராளிக் குழு கைவரிசை

டமஸ்கஸ், ஏப்.7

சிரியாவில் அரச போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன், அதனை இயக்கிய விமானியை இஸ்லாமியப் போராளிக் குழுவினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அலப்போ நகரில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. சிரிய இராணுவத் தரப்பினர் இதனை உறுதி செய்தனர்.

தமது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், விமானியை அவர்களின் பிடியில் இருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் இராணுவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



அல்-குவைதா- நூஸ்ரா போராளிக் குழுவினர் விமானியைக் கைது செய்ததாகவும், தமது தலைமையகத்துக்கு அவரை அழைத்துச் சென்றதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரலாட் பகுதியை அல் குவைதாவின் கூட்டுப் போராளி அமைப்பு கைப்பற்றியதில் இருந்து, சிரிய- ரஷ்ய போர் விமானங்கள் அப்பகுதியில் தாக்குதல் நடத்தி வருகின்றன. சில மாதங்களுக்கு முன்னரும் சிரியாவின் போர் விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## பதவியை துறக்கிறார் ஐஸ்லா

### பனாமா ஆவணங்கள் வெளியானதன் எதிரொலி

றெய்க்ஜாவிக், ஏப்.7

'பனாமா ஆவணங்கள்' பட்டியலில் ஐஸ்லாந்து தீவு பிரதமர் சிக்மண்டூர் டேவிட் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இதில் டேவிட் மற்றும் அவரது மனைவி பிரிட்டீஸ் ஆகியோர் விர்ஜின் தீவுகளில் [illegible] நிறுவனம் ஒன்றை வாங்கியதற்கான ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்று பிரதமர் டேவிட் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று ஐஸ்லாந்தின் முன்னாள் பிரதமர் ஜோகன்னா வலியுறுத்தினார்.

பனாமா ஆவணங்கள் வெளியிடப்பட்டதில் இருந்து, ஐஸ்லாந்து பிரதமரைப் பதவியில் இருந்து விலகுமாறு அந்த நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐஸ்லாந்து நாடாளுமன்றத்தின் முன்பு திரண்ட மக்கள், பிரதமர் பதவி வில
கோஷங்களை எழுப்பியதுடன்,
மேளங்களை முழங்கியும், கட்ட
தயிர் வீசியும் தமது எதிர்ப்பைத் தெ
ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரம் பே
கொண்டதுடன், 29 ஆயிரம் பேரி
விலகக்கோரி கையெழுத்து பெ
ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
ஆனால் தன்மீதான குற்றச்சாட்
பிரதமர் டேவிட் பதவி விலகும் எ

## தென் ெ
## வீடியே

சியோல், ஏப்.7
வட கொரியா, தெ
வைத் தாக்கும்
வெளியிட்டுள்ளது
சியோலில் அ
தென்கொரிய அ
கையான புளூ
தொடர் ஏவுகணை
கள் நடத்தி அதை
போலவும், இதர
கள் மீதும் ஏவுக
குதல்கள் நடத்த
அழிப்பது போல
இறுதியில் அனை
கடந்த ஜனவரி
கொரிய பகுதியில்
மற்றும் அமெரிக்
தென்கொரியா-அ
தாக்குதல் எச்சரி
மன்னிப்புக் கேட்
இறுதி எச்சரிக்கை
வீடியோவை வட
நகர் மீது ஏவுக
வெளியிட்டமை கு



## உயிரிய

வொஷிங்டன், ஏ
அமெரிக்க இராணு
லூக்கா, இராணு
களுக்கு வழங்க
வென்றுள்ளது.
இந்த நாய் அமெரி
இணைந்து பணி
றும் ஆப்கானில்
கண்ணிவெடிக
பணியில் இது ஈ
மோப்பத் திறமை
ரைப் பாதுகாப்
நடத்தும் பணி
2012 ஆம் ஆண்
ரம் புதைக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியாவுக்கு எச்சரிக்கை
# யா வெளியிட்ட வடகொரியா



தென் கொரியா
வீடியோவை
து.
அமைந்துள்ள
அதிபர் மாளி
ஹவுஸ் மீது
ணத் தாக்குதல்
னை அழிப்பது
அரச கட்டடங்
கணைத் தாக்
ந்தி அவற்றை
லவும் அதில் காட்டப்பட்டுள்ளது.
னத்துமே சாம்பலாகும் என்ற எச்சரிக்கையுடன் வீடியோ நிறைவடைகிறது.
மாதம் வட கொரியா அணு ஆயுதச் சோதனை நடத்தியதற்குப் பிறகு,
ில் பதற்றம் அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதமாகவே தென்கொரியா
க்கா மீது தாக்குதல் நடத்தப்போவதாக வடகொரியா மிரட்டி வருகிறது.
அமெரிக்கா இராணுவ கூட்டுப் பயிற்சி தொடங்கியதை அடுத்து வடகொரியா
ரிக்கை விடுத்து வருகிறது. தென் கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை
ட்கவேண்டும் என வட கொரியா இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.
கைக்குப் பணியவில்லை என்றால் என்ற தலைப்பில் 88 நொடிகள் ஓடும்
கொரியா வெளியிட்டுள்ளது. கடந்த 10 நாள்களுக்கு முன்பும் வொஷிங்டன்
கணைத் தாக்குதல்கள் நடத்துவது போன்ற வீடியோவை வடகொரியா
குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# மதம் கொண்ட யானை தாக்கி ஒரே குடும்பத்தில் 5 பேர் சாவு



புதுடில்லி, ஏப்.7

மதம்பிடித்த யானையொன்று தாக்கியதில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அசாம் மாநிலத்தில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் அமைந்துள்ள பெஹாலி வனப்பகுதியில் குடில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பமொன்றை யானை தாக்கியது. பெற்றோர், 2 சிறுவர்கள், ஒரு கைக்குழந்தை உட்பட 5 பேர் இதில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் சிறுமி ஒருவர் கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். குடும்பத்தவர்கள் நித்திரையில் இருக்கும்போது யானை வீட்டைத் தாக்கியதுடன், குடும்பத்தினரின் உயிர்களையும் பறித்துள்ளது என மாவட்ட வனத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். (த-ரி4)



# விருதை வென்ற இராணுவ நாய்

ஏப்.7
ணுவ நாயான 12 வயதான
ணுவத் தரப்பில் விலங்கு
கப்படும் உயரிய விருதை
.
மரிக்கக்கடற்படையினருடன்
ணிபுரிந்து வந்தது. ஈராக் மற்
ரில் 400 க்கும் மேற்பட்ட
களை அப்புறப்படுத்தும்
ஈடுபட்டு வந்தது. அத்துடன்
மை மூலம் இராணுவத்தின
ப்பான பாதையினூடு வழி
யையும் செய்து வந்தது.
ண்டு ஆப்கானில் தெருவோ
ட்டிருந்த கண்ணிவெடியை

அடையாளம் காண முயற்சி செய்தபோது வெடிகுண்டு வெடித்ததில் தனது ஒரு காலை இழந்தது. இதன் பின்னர் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றது.

பிரித்தானிய விலங்குகள் அறக்கொடை நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட 67 ஆவது விருது வழங்கும் நிகழ்வில் லூக்காவுக்கு 'டிக்கின் பதக்கம்' வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்தப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட முதல் கடற்படை நாய் லூக்கா ஆகும். மனிதச் சேதங்கள், நெருக்கடிகளின்போது இது மிகவும் துடிப்பாகச் செயற்பட்டது. கிறிஸ் வில்லிங்ஹாம் எனும் தனது உரிமையாளருடன் லண்டனுக்கு பயணித்து தனது விருதைப் பெற்றுக் கொண்டது. (த-ரி4)

# ாந்துப் பிரதமர்

விலகவேண்டும் என
, விசில் அடித்தும்,
டடத்துக்கு முட்டை,
தெரிவித்தனர். இந்த
பேர்வரை கலந்து
ட்ம்பிரதமரைப்பதவி
பெறப்பட்டுள்ளதாக
ர்.
ட்டுக்களை மறுத்த
எண்ணம் இல்லை

என்று திட்டவட்டமாகக் கூறிவந்தார். இந்த நிலையில் பிரதமர் சிக்மண்டூர் டேவிட் தனது பதவியில் இருந்து விலக ஒத்துக்கொண்டுள்ளதாக முற்போக்குக் கட்சியின் துணைத் தலைவர் மற்றும் விவசாய அமைச்சர் சிக்குர்டுர் ஐன்கி தொலைக்காட்சி ஒன்றின் நேரடி ஒளிபரப்பில் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து ஐஸ்லாந்தில் கடந்த இரண்டு நாள்களாக நிலவிய பதற்றமான அரசியல் சூழல் முடிவுக்கு வந்துள்ளது. (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் முதலாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. அதன் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது)




ஆனால் மற்றவர்கள் அலட்சியம் செய்தால் மட்டும் இவர்களால் தாங்க முடியாது. அவர்களை உண்டு அல்லது இல்லை எனச் செய்து விடுவார்கள். ஆனால் நேர்மையான வழியில்தான் நடப்பார்கள்.

பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள். எப்படிப்பட்ட எதிரியும், நேராக வந்து மன் னிப்புக் கேட்டால், உடனே மன்னிக்கும் மாண்பு படைத்தவர்கள். மீண்டும் அவர்களுக்கு உதவியும் செய்வார்கள். பொது வாகத் திருமணம் காலம் கடந்தே நடைபெறும். காதல் விடயங்களில் ஈடுபாடு ஏற்படும் என்றாலும், ஏமாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனைவிக்கும், நேரம் ஒதுக்கி, அவளை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். அரசியலில் வெற்றி பெற, ஒரு புகழ் பெற்ற கட்சியோ, அல்லது இயக்கமோ இவர்களுக்குத் தேவை. காரணம் மக்களை ஆசை காட்டி ஏமாற்றும் வித்தைகள் இவர்களுக்குத் தெரியாது. பொதுமக்களுக்கு உண்மையான மனத்துடன் துணிந்து நன்மைகளைச் செய்வார்கள்.

மக்களுக்குப் பிடிக்காத செயல்களையும், மக்களின் பிற்கால நன்மைகளுக்காகத் துணிந்து செயற்படுத்துவார்கள். எண்ணின் பலம் குறைந்தால் மேற்சொன்ன பலன்கள் மாறுபடும். சோதிடம், ஆன்மிகம், வைத்தியம் போன்ற கலைகளில் ஈடுபாடும் உண்டாகும். தனிமையில் அதிகமாகச் சிந்திக்கவும், செயலாற்றவும் விரும்புவார்கள். (தொடரும்)

தெல்லியூர்த்தேவி

# பக்தியின் மகிமை

அம்மை அப்பராகிய சிவபெருமான் எல்லாம் வல்லவர். அற்புதமான கருணை உள்ளவர். அடியவர்க்கு எளியவர். மனதார வழிபடுபவருக்கு அருள் பாலிப்பவர். அவரது கருணை மிகப் பெரியது. கண்ணப்பநாயனாரின் பக்தியை மற்றையோருக்கு உணர்த்த வேண்டி, தனது கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்தார், அதனைக்கண்ட கண்ணப்பர் சிவபெருமானிடத்தில் கொண்ட பக்தி மேலீட்டால், வேதனையடைந்து தனது கண்ணையே பெயர்த்தெடுத்து சிவனின் கண்ணின் மேல் வைத்து இரத்தப் பெருக்கை நிறுத்தி வைத்தார். அதனாலேயே கண்ணப்பர் என்ற பெயரையும் பெற்றார். இத்தகைய கருணை வள்ளல், காஞ்சிபுரத்தில் அரசாட்சி செய்த சோழ அரசனின் பக்தியையும் சோதிக்க விரும்பினார்.

சோழ அரசன் காட்டுவளம் காண விரும்பி காட்டுக்குச் சென்றான். காட்டில் சுற்றித்திரிந்து விதம் விதமான மரங்கள் செடிகள், பறவைகள், மிருகங்கள், மலர்கள், மூலிகைகள், குளங்கள், ஓடைகள் எல்லாவற்றையும் அரசனும் அவனுடன் கூட வந்த பரிவாரங்களும் பார்த்துப் பரவசம் அடைந்தனர். நேரம் சென்றதே தெரியவில்லை. களைப்பும், பசியும் அவர்களை வாட்டத் தொடங்கியது. ஓர் ஓடக்கரைப் புல்வெளியில் அமர்ந்து, ஓடையிலே உடலைக் கழுவிச் சுத்தம் செய்த பின்னர் உணவை உண்போம் என எண்ணினர். ஓடையிலே நன்கு குளித்து கரையேறி ஆடை அணி கலன்களை அணிந்து வீபூதி அணிந்துகொண்ட அரசன், அண்மையில் சிவன்கோயில் அல்லது சிவலிங்க சந்நிதி இருக்கிறதா எனப் பார்த்து வாருங்கள். ஏனெனில் சிவலிங்க தரிசனத்தின் பின்னர் தான் நான் சாப்பிடுவது வழமை எனக் கூறினார். மந்திரி, தளபதி ஆகியோர் சுற்று வட்டாரத்தில் தேடிப் பார்த்தனர். சிவன் கோயிலோ சிவலிங்கமோ எங்குமே காணப்படவில்லை. இவர்களுக்கும் களைப்பும் பசியும் வந்துவிட்டது. அரசரும் பசியுடன் களைத்திருக்கிறார் என மனம் வருந்தினர்.

தளபதியும் மந்திரியும் கலந்து பேசி ஒருமுடிவுக்கு வந்தனர். காட்டிலே மரம் வெட்டியவர்கள் விட்டுச் சென்ற ஆப்பு ஒன்றைக் கண்டு அதை எடுத்துச் சென்று கொன்றைமர நிழலில் சிவலிங்கம் போன்று நட்டு வைத்து அதற்கு ஒரு பட்டுச் சாத்தி, கொன்றைப்பூ, வில்வ இலைகளால் மாலை கோர்த்துச் சூட்டினர். இப்போது சிவலிங்க சந்நிதி உருவாக்கப்பட்டுவிட்டது. அச்சத்தோடு அரசனிடம் சென்றார்கள். அரசே! எங்கும் தேடியும் சிவன் கோயில் ஒன்றையும் காணவில்லை. நல்ல வேளையாக வேடர்களோ, மரம் வெட்டிகளோ வணங்கும் ஒரு சிவலிங்கத்தைக் கண்டு கொண்டோம். வாருங்கள் தரிசிப்போம் என்றார்கள். மகிழ்ச்சி அடைந்த அரசன் உணவுப் பொருள்களையும், ஓடை நீரையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். மந்திரியும், தளபதியும் காட்டிய சிவலிங்கத்துக்கு தான் கொண்டு வந்த பழங்கள் உணவுகளைப் படைத்தான். இந்தக் காட்டிலே எழுந்தருளி எனது விரதத்தை ஏற்றுக் கொள்ளும் சிவனாருக்கு எனது வணக்கங்கள் என்று கூறி நெடுஞ் சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினான். பின்னர் படைத்த உணவுகளையும் பழங்களையும் உண்டு களைப்பும் பசியும் ஆறப் பெற்றனர்.

திருப்தியடைந்த அரசன், இந்தக் காட்டில் இப்படி ஒரு அருள்மிகு சிவலிங்கம் எழுந்தருளி உள்ளது. இந்த இடத்தில் நித்திய பூசைகள் நடக்க வேண்டும். எனவே இந்த இடத்தில் ஒரு சிவாலயம் கட்டவேண்டும். எனவே அரண்மனைக்குச் சென்று நல்ல ஒரு சிற்பியை அழைத்து வாருங்கள்–என்றார். தளபதியும் மந்திரியும் திடுக்கிட்டனர். கடவுளே இப்பொழுது உண்மை வெளிப் பட்டால் எங்கள் கதி என்ன? எங்களைக் காப்பாற்று! அரசனை ஏமாற்றியது குற்றமே. ஆனால், அவர் பசியால் வாடுவது கண்டு மனமுடைந்த நிலையில், அவரைக் காப்பாற்றவே இவ்வாறு செய்தோம். சிவபெருமானே எங்களைக் காப்பாற்றுவீராக! என்று உயிர் உருகி, உணர்ச்சி பொங்க மனதுக்குள்ளே ஈசனை வேண்டினார்கள்.

சிற்பியும் வந்துவிட்டார், சிவாலயத்தை எழுப்பவும் சம்மதித்துவிட்டார். முதலில் அந்த இடத்தில் காணப்பட்ட சிவலிங்கமானது தாவர லிங்கமா? சங்கம லிங்கமா தான் தோன்றீஸ்வரரா? தேவலிங்கமா? மானிட லிங்கமா? என அறிய வேண்டும் எனக்கூறிய சிற்பி, முதலில் சிவலிங்கத் திருமேனியை ஆய்வு செய்ய தொடங்கினார்.

அங்கே அணிவித்திருந்த பட்டு, மலர் மாலை அகற்றப்படும்போது, மந்திரியும் தளபதியும் உண்மை வெளிப்படப் போகிறதே என்று அச்சத்தில் ஈஸ்வரா, நாங்கள் மன்னன் மேல் கொண்ட அளவுகடந்த அன்பினாலேயே இப்படிச் செய்தோம். எங்களைக் காப்பாற்று, என மனதுக்குள் வேண்டினர்.

சிவலிங்கத்தை ஆராய்ந்த சிற்பி அரசனை அழைத்து வேந்தே வந்து பாருங்கள்! இந்த சிவலிங்கம் ஓர் அற்புதமான தான்தோன்றீஸ்வரர் திருமேனி கொண்டவர். அருள் நிறைந்த சைதன்யம் (உயிர்ப்பு) பெருகும் அதி அற்புதமான சிவலிங்கம் என்று கூறினார். அரசன் சிவலிங்கத்தைத் தொட்டுத் தடவி ஆனந்தக் கூத்தாடி அதனைக் கண்டு பிடித்த மந்திரி, தளபதி ஆகியோரைக் கட்டிப் பிடித்து மகிழ்ச்சி கொண்டாடினான். அவர்களும் நன்றாகப் பார்த்தார்கள். அங்கே நிஜமான ஒளிப்பிளம்பான சிவலிங்கம் காட்சி கொடுத்தது. அவர்களுக்கு மிகுந்த ஆனந்தம். நிகழ்ந்ததைக் கூறினார்கள். நம்ப முடியாத அற்புதம் நடந்துள்ளது என எல்லோரும் சந்தோசம் அடைந்தனர். அரசனும் அவற்றைக் கேட்டு அதிசயித்தான். அவர்களை வணங்கி முறைப்படி சிவாலயம் அமைப்பித்தான். நித்திய நைமித்திய பூசைகள் நடத்த வாக்குக்கொடுத்து எழுதிவைத்தான். ஆப்பு மூலம் எழுந்தருளிய சிவன் ஆலயம் திரு ஆப்பனூர் என்ற பெயருடன் ஊராயிற்று. சிவனார் திரு ஆப்பீசர் எனும் திருநாமம் பெற்றார்.



"இந்தக் காட்டிலே எழுந்தருளி எனது விரதத்தை ஏற்றுக்கொள்ளும் சிவனாருக்கு எனது வணக்கங்கள் என்று கூறி நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்விக்கு வளம் சேர்க்கும் இணுவில் பொதுநூலகம்

லக்ஸ்மன்

பொது நூலகங்களும் சனசமூக நிலையங்களும் மக்களால் நன்கு பயன்படுத்தப்படுவதுடன் மக்களையும் சிறந்தவர்களாக மாற்றக்கூடிய செயற்பாடுகளைக் கொண்டதாக அமைய வேண்டும். இவை அந்தந்தக் கிராமத்துக்கு மாத்திமன்றி அயல் கிராமங்களுக்கும் நலன் விளைக்கக் கூடியதாக நிர்வாகத்தினரின் செயற்பாடுகளும் இடம்பெற வேண்டும். எனினும் அனேக சனசமூக நிலையங்களும் நூலகங்களும் இயக்கமின்றி வெறுமனே கிடப்பதையே பெரும்பாலும் காண முடிகின்றது. இதற்குவிதி விலக்காகி இணுவில் கிராமத்துக்கு மட்டுமன்றி அயல்கிராமங்களுக்கும் பயன்தரும் ஒரு பொது நூலகமாகவும் சனசமூக நிலையமாகவும் இயங்கும் இணுவில் பொதுநூல்கமும் சனசமூக நிலையமும் 14 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது இணுவில் கிராமமே பெருமிதத்துடன் இருந்ததைக் காணமுடிந்தது.

இன்று நவீன தொழில் நுட்பங்கள் காரணமாக பலதரப்பட்ட விடயங்களையும் அறிந்து கொள்வதற்காக மாணவர்கள் கணினிகளையும் இணையங்களையும் நாடிப் பறக்கின்றனர். அதனால்வாசிப்புத்திறன் மாணவர்களிடத்தில் மந்த நிலையிலேயே உள்ளது. இது குறித்துக் கல்விப் புலம் மனம் நொந்து கொண்டிருக்கும் நிலையில், இணுவில் பிரதேச மாணவர்களும், மக்களும் வாசிப்புத்திறமை உள்ளவர்களாக இருப்பதற்கு இந்தப் பொது நூலகமும் சனசமூக நிலையமுமே காரணமாக உள்ளதெனக் கூறிப் பெருமைப்படுகிறார்கள் அந்த ஊர் மக்கள். இன்று இருபத்து ஆறாயிரத்துக்கும் அதிகமான நூல்களைத் தன்னகத்தே கொண்டு சிறப்பாக இயங்கும் ஒரு நூலகமாக அது விளங்குகிறது என்றால், அங்குள்ள இளைஞர் குழாமே அதற்காகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

> மாணவர்களும், மக்களும் வாசிப்புத் திறமை உள்ளவர்களாக இருப்பதற்கு இந்தப் பொது நூலகமும் சனசமூக நிலையமுமே காரணமாக உள்ளதெனக் கூறிப் பெருமைப் படுகிறார்கள் அந்த மக்கள். இன்று இருபத்து ஆறாயிரத் துக்கும் அதிகமான நூல் களைத் தன்னகத்தே கொண்டு சிறப்பாக இயங்கும் ஒரு நூலகமாக அது விளங்குகிறது என்றால் அங்குள்ள இளைஞர் குழாமே அதற்காகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இணுவில் பொது நூலகத்தின் தலைவர் கு.விக்னரூபன் நூலகக் கொடியை ஏற்றி வைக்க, உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மங்கல விளக்கேற்றி 14 ஆவது ஆண்டு நிறைவு விழாவைத் தொடக்கி வைத்தார். இந்த நிகழ்வில் இணுவில் பிரதேசத்தையும் அயல்கிராமங்களையும் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். தலைமையுரையாற்றிய கு.விக்னரூபன் கடந்த பதின்நான்கு ஆண்டுகளில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டபோதிலும் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு இந்த நூலகத்தின் பங்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து கொண்ட இளைஞர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளால் கணிசமான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அவ்வூர் மாணவர்கள் எட்டியுள்ளதாகப் பெருமைப்பட்டுக்கொண்டார். இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இதன் உறுப்பினர்களாகவும் ஆட்சிக் குழுவில் 245 பேர்கள் வரையில் இடம்பெறுவதாகவும் சொல்லப்படுகின்றது. வெளிநாடுகளைச் சேர்ந்த இணுவில் வாழ் மக்கள் இந்த நூலகத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பவர்களாக உள்ளனர்.

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, உரையாற்றுகையில் வடமாகாணத்தை உலகுக்கு அடையாளம் காட்டுவது யாழ்ப்பாணமே. யாழ்ப்பாணம் என்றால் படித்தவர்கள் உள்ள பிரதேசம் என்பதைச் சுட்டிநிற்கிறது. நூல்கள் மூலம் பெறக்கூடிய அறிவு உன்னதம் என்பதால், வாசிப்பு அவசியமானது. இது ஒரு சிறிய நாடு எனினும் பெருமை கொண்டது. பூகோளத்தில் சிறிதாக உள்ள இந்த நாட்டில் இருந்து நாம் நிறையவே கற்க வேண்டியுள்ளது. பெருமளவு பயனுள்ள நூல்களை உள்ளடக்கிய இந்த நூலக விழாவில் கலந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்று கூறினார். பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வாசிப்பு மனிதனை முழுமையாக்குகிறது, எந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் கூட பிள்ளைகளுக்கு அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. இந்த நூலகம் அந்தப் பணியைச் சிறப்பாக முன்னெடுப்பதை நான் அவதானித்திருக்கிறேன். இது இந்தப் பிரதேசத்தின் ஓர் ஆலயம். அதாவது அறிவாலயம் என்று புகழாரம் சூட்டினர். மறவன்புலவு சச்சிதானந்தன் இதன் பணிகள் காத்திரமானது, பெறுமதி மிக்கது என வாழ்த்தினார்.

தமிழக அரசும், தமிழக அறிஞர்களும் கடந்த ஒரு வருடத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான நூல்களை இந்த நூலகத்துக்கு வழங்கியுள்ளனர். தமிழக அரசின் உதவி இந்த ஆண்டிலும் கிடைக்கவுள்ளதாகத் தலைவர் குறிப்பிட்டார். மாணவர்களுக்கான கணினிப் பயிற்சிகள், விளையாட்டு ஊக்குவிப்புக்கள் எனப் பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வரும் இந்த நிலையம், ஒரு சர்வதேச தரத்திலான சிறுவர்கள் பாட சாலை ஒன்றையும் ஆரம்பிக்கும் பொருட்டு காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ளது. அதில் நவீன வசதிகள் கொண்ட பாடசாலையை உருவாக்க மக்களின் உதவியையும் நாடியுள்ளது. இவற்றுடன் இணுவில் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முக்கிய சிரமதானப் பணிகளையும் இந்த இளைஞர்கள் முன்னெடுத்து வருகின்றனர். நிலையத்தின் போசகராகவுள்ள பேராசிரியர் தேவராஜாவின் சிறந்த வழிகாட்டலில் இந்த நிலையம் பல்வேறு பணிகளை முன்னெடுப்பதாகவும் இளைஞர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிலையத்தில் சுமார் 15 பேர்கள் சேவையாற்றுகிறார்கள். மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்படுகின்ற போதிலும் அவர்களது சேவை அர்ப்பணிப்பானதாக உள்ளது. பிரதேச சபை குறைந்தது இரண்டு ஊழியர்களுக்காவது கொடுப்பனவுகள் வழங்கி உதவ வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. ஓர் அரச நிறுவனத்துக்கு இணையாகச் செயற்படும் தனிப்பட்ட அமைப்பு இது. இதன் வளர்ச்சிக்கு பிரதேச செயலகம், பிரதேச சபை என்பவை முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோள். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் கண்ணினிப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்குமான பரிசில்கள் சான்றிதழ்களை இந்திய துணைத்தூதுவர் நடராஜன், பிரதேச செயலர் நந்தகோபாலன், மறவன்புலவு சச்சிதானந்தன், பிரதேச சபைச் செயலாளர் சுதர்சன் ஆகியோர் வழங்கினர். விவசாயக் கிராமமான இணுவிலின் மகளிரின் உழவர் நடனம் எடுப்பாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அய்யாசாமிக்கு வந்த சோதனை

அய்யாசாமி பத்தாம் வகுப்பு மாணவன். புத்தகம் படிப்பதில் அதிகமான ஆர்வம் கொண்டிருந்தான் அவன்.

பாடப் புத்தகங்களைப் படிப்பதைவிட, பொழுது போக்குப் புத்தகங்களைப் படிக்கவே அவனுக்கு அதிகம் பிடிக்கும். அதிலும் கதைப் புத்தகங்கள் கிடைத்துவிட்டால் போதும்... கட்டோடு கரும்பு கிடைத்து விட்டதுபோல இருக்கும் அவனுக்கு. ஒரு நாளைக்கு ஒரு கதையாவது படித்து முடித்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பான் அவன்.

தினமும் நூலகம் சென்று கதை, நாவல் என்று புத்தகங்கள் எடுத்துப் படிப்பான். மேலும் புத்தகங்களை நூலகத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டு வந்து இரவு நேரத்திலும் கண்விழித்துப் படிப்பான். பத்து, பதினோரு மணி வரை படித்துவிட்டுத் தூங்குவது அவன் வழக்கம்.



அன்று ஞாயிற்றுக்கிழமை - பள்ளி விடுமுறை.

காலையிலும் மாலையிலும் நூலகம் சென்று புத்தகங்களைப் படித்த அய்யாசாமி வீடு திரும்பும்போது நூலகத்திலிருந்து புத்தகம் ஒன்றை எடுத்து வந்திருந்தான்.

இரவுச் சாப்பாடு முடிந்தது. அந்தப் புத்தகத்தை எடுத்துப் படுக்கையில் சாய்ந்தபடியே படித்துக் கொண்டு இருந்தவன் அப்படியே தூங்கிவிட்டான்.

நள்ளிரவு2 மணி.

நாய்கள் குரைத்தன. ஒரு கறுத்த உருவம் சுவர் ஏறிக் குதித்தது. எப்படியோ வீட்டுக்குள் வந்து. அறைக்குள் நுழைந்தது!

அடிமேல் அடிவைத்து நடந்து மெதுவாக அய்யாசாமியின் கட்டிலை நெருங்கிய உருவம் சத்தமில்லாமல் தலையணை ஒன்றை எடுத்து அங்கே படுத்துக் கிடந்த அய்யாசாமியின் முகத் தின் மீது வைத்து இரு கைகளாலும் பலமாக அழுத்தியது! மூச்சு முட்டவும்... கையையும் காலையும் உதறியபடி "ஐய்யய்யோ" என வீறிட்டு அலறிக்கொண்டு இயந்திர மனிதனைப்போல் இசகு பிசகாக விழுந்தடித்து எழுந்தான் அய்யாசாமி.

அருகில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த அவனது தாய் இந் தச் சத்தத்தைக் கேட்டு பதறி அடித்துக் கொண்டு எழுந்தாள்.

பேயறைந்தாற்போல உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்ட படபடப்புடன் கட்டிலில் அமர்ந்திருந்த அய்யாசாமியைப் பார்த்தாள்.

"கண்ட கண்ட புத்தகங்களை எல்லாம் கொண்டு வந்து இராத்திரி நேரத்திலை படிக்க வேண்டாம் என்று சொன்னால் கேட்டால்தானே" என்று அய்யா சாமியை மிகவும் கோபித்துக் கொண்டாள் அவன் தாய்.

பயங்கரத் தோற்றத்துடனும் கோரப்பற்களுடனும் கூடிய ஒரு கிழவியின் படம் போட்ட "ரத்தக் காட்டேறி" என்ற கதைப் புத்தகம் ஒன்று அங்கே கிடந்து திகிலூட்டிக் கொண்டிருந்தது!



# வரலாற்றில் இன்றைய தினம்



1767 - பர்மா - சியாமிஸ் போர் முடிவுக்கு வந்தது.
1906 - வெசுவியஸ் எரிமலை வெடித்து நேபாளத்தில் பேரழிவை ஏற்படுத்தியது.
1939 - இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அல்பேனியாவை இத்தாலி ஆக்கிரமித்தது.
1943 - ஆயிரம் வரையான யூதர்கள் அரை நிர்வாணமாக்கப்பட்டு ரெஹ பொவிலா நகரிலிருந்து அருகிலுள்ள கிராமமான பிலெபனிங்கா வரை அணிவகுத்துச் செல்லவிட்டு சுட்டுக்கொல்லப்பட்டு குழிகளில் புதைக்கப்பட்டனர்.
1945 - இரண்டாம் உலக மகாயுத்தம். ஜப்பானிய போர்க் கப்பலான யமாட்டோ, அமெரிக்க விமானங்களால் ஒக்கினாவுக்கு வடக்கே 200 மைல் தொலைவில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.
1946 - பிரான்சிடமிருந்து சிரியா சுதந்திரம் பெற்றமை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
1948 - உலக சுகாதார நிறுவனம் (WHO)ஐக்கிய நாடுகள் சபையால் ஸ்தாபிக்கப்பட்டது.
1948 - சீனாவிலுள்ள ஷங்காயில் பௌத்த மடாலயம் ஒன்றில் தீப்பிடித்து 20 துறவிகள் உயிரிழந்தனர்.
1955 - உடல் நலக் குறைவு காரணமாக பிரிட்டன் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் பதவி விலகினார்.
1964 - ஐபிஎம் தனது சிஸ்டம் 360 ஐ அறிவித்தது.
1968 - பந்தயக் காரோட்டத்தில் உலக சம்பியனான ஜிம் கிளார்க், போர்முலா - 2 பந்தயப் போட்டியின் போது விபத்துக்கு உள்ளாகிச் சாவடைந்தார்.
1969 - இன்டர் நெட்டின் குறியீட்டுப் பிறந்தநாள்.
1978 - நியூட்ரோன் குண்டுகளை மேலும் தரம் வாய்ந்தவையாக மாற்றுவதை அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் நிறுத்தினார்.
1980 - ஈரான் இஸ்லாமிக் குடியரசுடனான உறவை அமெரிக்கா முறித்துக் கொண்டது.
1985 - ஐரோப்பாவில் நடுத்தூர ஏவுகணைகளை நிறுத் துவதாக சோவியத் தலைவர் மிக்கைல் கொப்பர் சேவ் பிரகடனம்.
1989 - சோவியத் நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கி 42 மாலுமிகள் சாவு.
1990 - ஸ்கன்டினேவியன் ஸ்ரார் பயணிகள் படகு தீப்பற்றியதில் 159 பேர் சாவு.
2003 - பாக்தாத் அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டது. இரண்டு நாள்களின் பின் சதாம் ஹீசைனின் ஆட்சி வீழ்ச்சிடைந்தது.
2009 - பெருவியன் முன்னாள் ஜனாதிபதி அல்பேற்றோ பியூஜிமோரிக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை உடையணிந்த கள்ளத்தவசி கரையோரம் கடுந்தவம் செய்கிறான் அவன் யார்?
கொக்கு

02. காளைக்குக் கழுத்து மட்டும் தண்ணீர். அது என்ன?
தவளை

03. காற்று இல்லாத கண்ணாடிக் கூண்டில் மஞ்சள் கோழி மயங்கி கிடக்குது. அது என்ன?
முட்டை

04. காலில்லாதவன், வளைவான், நெளிவான்; காடு மேடெல்லாம் அலைவான். அவன் யார்?
பாம்பு

05. காலைக்கடிக்கும் செருப்பல்ல, காவல் காக்கும் நாயல்ல. அது என்ன?
முள்

06. காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும் சங்கு. அது என்ன?
சேவல்

07. காலில்லாப் பந்தலைக் காணக் காணச் சந்தோசம். அது என்ன?
வானம்

08. கையுண்டு, கழுத்துண்டு, தலையுண்டு, ஆனால் உயிர் இல்லை அது என்ன?
சட்டை

09. வண்ணப் பட்டுச் சேலைக்காரி, நீல வண்ண ரவிக்கைக் காரி. அது என்ன?
மயில்

10. சொன்னதைச் சொல்லும் பெண், பச்சைப் பாவாடை கேட்குதாம். அது என்ன?
கிளி



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்களிடத்து அன்பு வேண்டும்

ப.அனோஜா

ஒழுக்க விழுமியப் பண்புகளிலே மனிதனால் கடைப்பிடிக்கப்பட வேண்டியவற்றுள் உயர்ந்த பண்பாகக் கருதப்படுவது அன்புடைமை ஆகும். எமது வாழ்நாளில் ஏனைய உயிர்களிடத்து அன்பு காட்டினால், அதுவே சிறந்த புண்ணியமாகவும் பண்பாகவும் அமையும். அன்பின் மகத்துவத்தைப் பற்றி பல ஆன்றோர்களும், சான்றோர்களும் தெளிவாகக் கூறியுள்ளனர். திருமந்திரத்திலே திருமூலர் 'அன்பே சிவம்' எனக் கூறியுள்ளார். அதாவது அன்பெனும் பண்பை முழுமையாகக் கொண்டு உருவானவனே சிவன் எனக் கொள்ளப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் திருவள்ளுவப் பெருந்தகையும் திருக்குறளிலே அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை, வன் பார் கண் வற்றல் மரந் தளிர்த்தற்று என அழகாக எடுத்தியம்பியுள்ளார். அதாவது இந்த உலகில் வாழ்கின்ற உயிர்களின் வாழ்வில் அன்பில்லை எனின், அவர்களது வாழ்க்கையானது பாலைவனத்தின் பட்ட மரத்துக்கு ஒப்பானதாகும் என்பது பொருளாகும். ஆதரவற்ற நோயாளர்களை அன்னை போல் அரவணைத்து அன்பு காட்டினார் அன்னை திரேசா. அண்ணல் காந்தியடிகளும் அகிம்சாவழியில் அன்பு செலுத்தினார். செடி, கொடிகளின் மீது கொண்ட அன்பு காரணமாக தன் தேரையே ஈந்தான் வள்ளல் பாரி. இவ்வாறான ஆன்றோர்கள் மறைந்த பின்பும் இவர்களைப் பற்றி இந்த உலகம் பேசிக் கொண்டும், முன்னுதாரணப்படுத்திக் கொண்டும் இருக்கின்றதானால், அதற்கெல்லாம் இவர் களின் அன்பு வழியே காரணம் ஆகும். பன்றிக் குட்டிகளின் மீதுள்ள அன்பால் தானே தாயாக மாறி அவற்றுக்கு பால் கொடுத்தார் சிவபிரான். இவ்வாறு புத்தபெருமான், இயேசு பிரான், நபிகள் நாயகம் போன்றவர்களும் அன்பு வழி நின்றே இவ்வுலக மக்களைக் காக்கின்றனர்.



ஒருவர் மீது இன் னொருவர் அன்புடன் இருந்தால்தான், இந்தச் சமூகத்திலே எல்லோருடனும் ஒற்றுமையாகவும், ஏனையோருக்கு ஒத்துழைப்பு நல்கியும் வாழ்ந்து சாதிக்க முடியும். எனவே நாமும் அன்பின் மகோன்னதத்தை உணர்ந்து அன்பு வழி நின்று மற்றவர்களை மகிழ்வித்தும், நாமும் மகிழ்ச்சியுடன் வாழமுடியும். "பூப்பூவாய் பூத்திருக்கும் பூவிலே ஆயிரம் பூ, பூவிலே சிறந்த பூ என்ன பூ - அன்பு" என்னும் கவிஞர் கண்ணதாசனின் கவி வரிகளுக்கு அமைய மற்றவர்கள் மீதும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி வாழ்வோம்.

(கட்டுரையாளர் யா/ வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

# நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள்

சாவகச்சேரியில் கடந்த வாரத்தில் வெடி பொருள்கள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து பெரும்பான்மையின அரசியல்வாதிகள் மத்தியிலிருந்து வெளிக்கிளம்பிய அச்ச அலை, இன்னமும் முடிவுக்கு வந்தபாடில்லை.

விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டமைப்புடனும், விமான மற்றும் கடற்படையணிகளையும் கொண்டிருந்த வேளையில் நிலவாத பாதுகாப்பு அச்சுறுத்தலை, இப்போது நாடு எதிர்நோக்குகின்றது என்ற தோற்றப்பாட்டை அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட வங்குரோத்து அரசியல்வாதிகள் ஏற்படுத்த முனைந்து கொண்டிருக்கின்றனர்.

எப்படியேனும் இழந்துபோன ஆட்சியைப் பெற்று அதிகாரத்துக்கு மீண்டும் வந்துவிடவேண்டும் என்ற வெறியே மகிந்த தரப்பு எதிரணியினருக்கு இருக்கின்ற இறுதி இலக்கு என்பது வெள்ளிடைமலை.

போரியல் நெறிமுறைகளை மீறி மிகவும் கொடூரமான முறையில் போரில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட மகிந்த ராஜபக்ச அரசு, இந்த நாட்டில் வரலாறு காணாத அபிவிருத்தியை முன்னெடுத்ததாக மார்தட்டிக் கொண்டாலும், பெரும் ஊழலுக்கு மத்தியில் அமைத்த வீதிக் கட்டமைப்பைத் தவிர, ஏனையவை யாவுமே தமது பிரதிமையை நிலை நிறுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட அடையாளச் சின்னங்களே என்பதை தற்போதைய நிலைமை புலப்படுத்தி வருகின்றது.

மத்தள விமானநிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்றவையெல்லாம் சுய தம்பட்டத்தின் அடையாளச் சின்னங்களே தவிர, அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் அல்ல.

அச்சம் எமது முன்னோக்கிய பயணத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒருபோதுமே இடமளிக்கக் கூடாது. மாறாக, அனைவரும் சம உரிமை பெற்று வாழக் கூடிய எதிர்காலத்தை நோக்கிய நம்பிக்கை மிக்க பயணத்தைத் தொடர்வதே வாழ்வில் உண்மையான நல்லிணக்கத்துக்கு வழிகோலும் என்பதை உணர்ந்து இந்த அரசு தீர்மானங்களை மேற்கொள்ள வேண் டும்.

இந்த நாட்டில் கொடிய போரின் விளைவுகளால் சொல்லொணாத் துயரை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு, நீதியுடன் கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு திடசங்கற்பம் கொண்டிருக்குமேயானால், மகிந்த தரப்பினர் போன்ற வங்குரோத்து அரசியல்வாதிகளால் கட்டவிழ்த்து விடப்படும் போலியான அச்ச கோசங்களை புறம் தள்ளி வைத்துவிட்டு, உண்மையான நல்லிணக்கத்தால் வரக்கூடிய நன்மைகளைக் கருத்தில்கொண்டு செயலாற்றுவது அவசியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம், இரகசியம் கூற வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிர்வாக மாற்றம் செய்வீர்கள். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது. ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப் பணி திருப்தி தரும். இலாபம் அதிகரிக்கும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் மீது, பலரும் நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில், குறுக்கீடு விலகும். ஆதாயம் அதிகரிக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.

**கடகம்:** பயனற்ற பேச்சில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

**சிங்கம்:** எதிர்மறையாகப் பேசுபவரிடம் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பிரச்சினைகள் குறுக்கிடலாம். இலாபம் சுமார். உடல் நலத்துக்கு, மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.





**கன்னி:** திட்டமிட்ட பணியை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** மனதில் தெளிவு பிறக்கும். சமயோசிதமாகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேறும். பெண்கள், தாயின் அன்பைப் பெறுவர்.



**விருச்சிகம்:** பணி நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். தொழிலில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள், பணம், நகையை இரவல் கொடுப்பது கூடாது. உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** திடீர் அவசரப் பணியால், சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலத் தன்மையைப் பாதுகாக்கவும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் செயற்பாடு, நிம்மதி அளிக்கும்.

**மகரம்:** புதியவர்களின் அறிமுகத்தால், ஆதாயம் அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில், விற்பனை பெருகும். இலாபம் உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** பிறரிடம் ரகசியம் எதுவும் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் சிக்கனமாக செலவழிப்பது நல்லது. உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். சொத்துச் சேர்க்கை உண்டாகும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 5 | 6 | | 2 | |
| 2 | | | | 8 | | 5 | | 4 |
| | | 8 | | | 2 | | | |
| | | | | | | 7 | | 2 |
| | 3 | | | 7 | | | 9 | |
| 9 | | 6 | | | | | | |
| | | | 5 | | | 9 | | |
| 5 | | 3 | | 1 | | | | 6 |
| | 1 | | 8 | 9 | 3 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 |
| 4 | 6 | 8 | 7 | 9 | 5 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 8 | 4 | 6 | 5 | 7 | 9 |
| 3 | 4 | 1 | 6 | 8 | 7 | 2 | 9 | 5 |
| 8 | 7 | 6 | 5 | 2 | 9 | 1 | 4 | 3 |
| 2 | 5 | 9 | 1 | 3 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 8 | 4 | 3 | 6 | 1 | 9 | 5 | 2 |
| 9 | 3 | 2 | 4 | 5 | 8 | 7 | 1 | 6 |
| 6 | 1 | 5 | 9 | 7 | 2 | 4 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





# சர்வதேசத்தை வட்டமிடும் தமிழ் சினிமா

அண்மைக்காலமாக தமிழில் உருவாகும் படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்குபற்றி பல்வேறு விருதுகள், பாராட்டுக்கள் என்பவற்றைப் பெற்று வருகின்றன. இந்த வகையில் 'காக்கா முட்டை', 'குற்றம் கடிதல்', 'விசாரணை' ஆகிய படங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்த வரிசையில் தற்போது கதிர் நடிப்பில் உருவாகியுள்ள 'சிகை' என்ற படத்தையும் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். படம் ஒரே நாளில் நடக்கும் கதையாக உருவாகியிருக்கிறது. கதிர் இந்தப் படத்தில் சில காட்சிகளில் பெண் வேடத்திலும் நடித்துள்ளார். ஒருசில காட்சிகளில் மட்டும் வரும் கெற்றப் என்றாலும், இந்தக் கதாபாத்திரத்துக்காக தனது உடல்நிறை மற்றும் முகபாவனைகளை மாற்றி நடித்துள்ளார். இந்தப் படம் கதிருக்கு நிச்சயம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி தரும் எனப் படக்குழுவினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தற்போது படத்தின் படப்பிடிப்புகள் முடிந்துள்ளன. விரைவில், இறுதிக்கட்டப் பணிகள் தொடங்கவுள்ளன.






இருபது வயதுள்ள பெண் ஒருத்திக்கு இதயத்தில் அறுவைச் சிகிச்சை நடந்தது. அறுவைச் சிகிச்சையில் கிட்டத்தட்ட சாவின் விளிம்புக்குப்போன தருணத்தில் அவள் கடவுளைக் கண்டாள். கடவுளிடம், "ஆண்டவா, எனது ஆயுட்காலம் முடிந்துவிட்டதா?" என்று கவலையோடு கேட்டாள். அதற்குக் கடவுள், 'இல்லை... இல்லை...உனக்கு இன்னமும் 40 வருடங்கள் இருக்கின்றன. நீ 40 வருடங்கள் உயிர் வாழலாம்' – என்றார் .

பின்னர், இதய அறுவைச் சிகிச்சை முடிந்தது. பெண் பிழைத்துக் கொண்டாள். சில மாதங்களின் பின்னர் அவள் பியூட்டி பார்லர்க்குச் சென்று, எல்லா மேக்கப்பையும் போட்டுக்கொண்டு வீதியில் நடந்து வந்தாள். வீதியில் நின்ற இளைஞர்களும் அவளையே பார்ப்பதைக் கண்டு ரசித்துக்கொண்டே வீதியால் நடந்தாள். அப்போது வேகமாக வந்த பஸ் ஒன்றுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே அந்தப்பெண் உயிரிழந்தாள்.

இறந்த பின்னர் தண்டனைகளுக்காக கடவுளின் முன்பாகக் கொண்டு செல்லப்பட்டாள். அப்பெண் கடவுளிடம் கோபமாகக் கேட்கிறாள், 'எனக்குச் சாவு வருவதற்கு இன்னும் 40 வருடங்கள் இருப்பதாகச் சொன்னீர்களே, ஏன் பஸ் விபத்திலிருந்து என்னைக் காப்பாற்றவில்லை?' அதற்கு 'அட..... நீயா அது? அடையாளம் தெரியாமல் போய்விட்டதே' என்றாராம் கடவுள்.

நீதி:– பொண்ணுங்க ஓவரா மேக்கப் போட்டா, கடவுளுக்கே குழப்பம் வரலாம்.

படித்ததில் பிடித்தது



**சின்னக்குட்டி** @pathi77566 · 16h
குறுக்கு வழியை கண்டுபிடிப்பதே திறமை என்று நினைப்பவர்கள் உள்ளவரை, நேர்மை என்பது முட்டாள் தனமாகவும் கையாலாகாத் தனமாகவுமே பார்க்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ புதுசு



சிறுவர்களுக்கான கவுண் அறிமுக மாகியுள்ளது. இலேசான துணியில், அழகான வடிவமைப்பில் அறிமுகமாகியுள்ளது. இதன் விலை 800 ரூபாவில் இருந்து 1,200 ரூபா ஆகும்.

# பயன் தரும் வீட்டுக் குறிப்புகள்!

- வீட்டில் குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாதவர்கள் இட்லி மா, தோசை மா என்பவை புளித்துப்போகாமல் தடுக்க வேண்டுமானால், அரைத்த மாவை பிளாஸ்ரிக் டப்பா அல்லது பக்கெட்டில் போட்டு மூடி வைத்தால் புளித்துப் போகாமல் இருக்கும்.
- வீட்டில் குளிர்சாதனப் பெட்டி இல்லாதவர்கள் காய்கறிகளின் மீது ஈரத் துணியைப் போட்டு மூடி வையுங்கள். அவை வாடாமல் இருக்கும்.
- பொருள்களைக் கறையான் அரிக்காமல் இருக்க, கர்ப்பூரத்தைப் பொடி செய்து தூவி வையுங்கள்.
- வெள்ளிச் சாமான்களைப் பீரோவில் வைக்கும்போது, அதற்குள் கர்ப்பூரத்தைப் போட்டு வைப்பது நல்லது.
- அசைவம் சமைத்த பிறகு பாத்திரங்களில் வீசும் துர்நாற்றத்தை நீக்கப் பாத்திரங்களில் சிறிதளவு புளியைத் தடவிப் பிறகு வழக்கம் போல் கிளீனிங் பவுடர் போட்டுத் தேய்க்க வேண்டும்.
- இஞ்சியை ஈரத்துணியில் சுற்றித் தண்ணீர்க்குடத்தின் மேல் வைத்திருந்தால், பத்து நாள்கள் வரை புதிதாகவே இருக்கும்.
- காய்ந்த எலுமிச்சை, தோடம்பழத் தோல்களை அலுமாரியில் வைத்தால் பூச்சிகள் அணுகாது.
- கடையில் மூக்குப் பொடி வாங்கித் தண்ணீரில் கரைத்து எறும்புப் புற்றின் மேல் தெளித்து விடுங்கள். எறும்புகள் மாயமாய் மறைந்து போகும்.



**நாளை**
**பங்குனி -26**
வெள்ளிக்கிழமை
08.04.2016
திதி: பிரதமை
பி.ப.03.03 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பி.இ.01.50 வரை
ராகுகாலம்:
10.37-12.07 வரை
சுபநேரம்:
06.07-07.37 வரை
அமாவாசை விரதம்

# ரவை பர்பி



### தேவையானவை

வறுத்த ரவை – 1 கப்
நெய் – 1 கப்
ஏலக்காய் – சிறிதளவு
முந்திரி – ஒரு கைப்பிடி
சீனி – 3 கப்
பால் – அரை லீற்றர்

### செய்முறை

சட்டியில் பாலை ஊற்றி, அதில் சீனியைக் கொட்டிக் கிளறவும். சீனி கரைந்ததும் வறுத்த ரவையைக் கொட்டிக் கிளறவும். ரவை வெந்து வரும்போது நெய், ஏலக்காய்ப் பொடி, வறுத்த முந்திரி சேர்த்து மைசூர்பாகு பதத்தில் கிளறி இறக்கவும். நெய் தடவிய தட்டில் ஊற்றி சமப்படுத்தி, அது இறுகியதும் வில்லைகளாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 25 | 30 |
| கத்தரி | 60 | 60 | 50 | 50 | 50 | 40 | 35 | 40 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 70 | 80 | 60 | 60-50 | 40 | 40 | 50 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50-60 | – | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | - 80 | 100 | 72 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40-30 | 50 | 20 | 35 |
| தக்காளி | 50 | 70 | 40 | 80 | 40-45 | 80 | 60 | 45 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 30-40 | 40 | 40 | 30 |
| கீரை | 30 | 50 | 40 | 15 | 20-30 | 20 | 20 | 25 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 25-30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 100 | 100 | 80 | 100-120 | 120 | 100 | 140 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 | 50-60 | 40 | 30 | 40 |
| கோவா | 40 | 80 | 50 | 80 | 40-60 | 100 | 70 | 60 |
| வெண்டி | 50 | 70 | 60 | 80 | 80-70 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 120 | 100 | 140 | 140 | 120-100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 140 | 100-120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40-50 | 30-35 | 40 | 30-45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70-80 | 100 | 72 | 100 |
| தேசிக்காய் | 200 | 220 | 200 | 140 | 160-170 | 200 | 200 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 80 | 100 | 140 | 100 | 100-120 | 120 | 50 | 80 |
| இராசவள்ளி | 160 | 150 | 140 | 160 | 140-120 | – | 110 | 70 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 350-500 | 300 | 350 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 650 | 700 |
| நண்டு | 200 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 600 | 650 | – |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 600 | 420 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 650 | 600 | 650 |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 400 | 450 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 450 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | – | – |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 500 | 400 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 350 | 200 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 300 | – | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 400 | 250 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 250 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 400 | 400 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைக் கோளாறுகள் கொண்ட பட்டதாரி மாணவர்களுக்கு மடிக்கணினி அன்பளிப்பு



பார்வைக்கோளாறுகள் கொண்ட பட்டதாரி மாணவர்களுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கொமர்ஷல் வங்கி விசேடமாக வடிவமைக்கப்பட்டதும் விசேட மென்பொருள்களைக்கொண்டதுமானமடிக்கணினிகளை அன்பளிப்புச் செய் துள்ளது. இதன் மூலம் எமது பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மேலும் 20 மாணவர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

கண்டி போதனா வைத்தியசாலையில் இந்தக் கணினிகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதுவரை இவ்வாறான கணினிகளைப் பெற்றுக் கொண்ட பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 40 ஆக அதிகரித்துள்ளது.

அகலத் திரைகொண்ட இந்தக் கணினிகளில் ஜாவ்ஸ் என்ற விசேட மென்பொருள் இணைக்கப்பட்டுள்ளது. கீபோர்ட் மூலம் படச்சில் பெரும் பொறிமுறையை வாசிக்கும் ஆற்றல் கொண்டதே இந்த மென்பொருள். பாவிப்பவர்கள் தமது பிழைகளைத் திருத்திக் கொள்ள இது உதவும்.

2014 இல் இத்தகைய கணினிகளின் முதல் தொகுதியை பார்வைக் கோளாறு கொண்ட பட்டதாரி மாணவர்களின் முதலாவது குழு பெற்றுக் கொண்டது. றுகுணு, பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜயவர்தன பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த மாணவர்களின் கல்வித் துறையில் காணப்பட்ட பல தடங்கல்களை இந்த கணினிகள் நீக்கியுள்ளதென நாம் அறிகின்றோம் என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம். விரிவுரைகளைப் பதிவு செய்யவும், திட்டமிடவும், ஏனைய பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் இவை அவர்களுக்கு பெரும் உதவியாக உள்ளது என்றார்.

மென் பொருளுடன் கூடிய கணினிகளைஅவர்கள் பெற்றுக் கொள்ள முன் இந்தமாணவர்கள் விரிவுரைகளின் குரல் பதிவுகளை ஒலிப்பதிவு செய்து அதில் கவனம் செலுத்தி வந்தனர். ஆனால் பல்வேறு ஓசைகளும், இன்னும் பலகாரணிகளும் இவற்றைத் தெளிவாக ஒலிப்பதிவு செய்வதில் இடையூறாக இருந்து வந்தன. எனவே முழுமையான விரிவுரைக் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேயே அவர்கள் காணப்பட்டனர். இப்போது இந்தக் கணினிகள் மூலம் அவர்கள் தமது விரிவுரைகளை தரவிறக்கம் செய்து கொள்கின்றனர்.

அதில் குரல் பதிவுகள் மிகத் தெளிவாக அமைவதால் அவர்கள் பூரண பயனை அடைகின்றனர் என்று அவர் மேலும் விளக்கினார். தமது விரிவுரைத் தேவைகளை நிறைவேற்ற இத்தகைய மாணவர்களுள் பெரும்பாலானவர்கள் பிரெய்ல் முறையையே பின்பற்றுகின்றனர். அவர்களுக்காக உதவும் ஏனைய மாணவர்களுக்கும் அவர்கள் அவற்றை சத்தமிட்டே வாசித்துக்காட்ட வேண்டியநிலையும்உள்ளது ஆனால் கொமர்ஷல் வங்கி தற்போது வழங்கி வரும் இந்தக்கணினிகள் மூலம் அவர்கள் தமது காரியங்களை சுதந்திரமாக மேற்கொள்ள முடிகின்றது. இவற்றைப் பயன்படுத்தியே அவர்கள் தமது கேள்விகளுக்கான விடைகளையும் வழங்க முடிகின்றது.

இந்த விடே கணினி வழங்கும் திட்டத்துக்கு அப்பால் கொமர்ஷல் வங்கி ஒவ்வொரு வருடமும் 50 பட்டதாரி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் மற்றும்மடிக்கணினிஎன்பனவற்றையும் வழங்கி வருகின்றது. வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் இவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடுமுழுவதும் மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த வங்கி பாடசாலைகளுக்கு சகலவசதிகளும் கொண்ட முழு அளவிலான தகவல் கணினிஆய்வு கூடங்களை கொமர்ஷல் வங்கி அன்பளிப்புச் செய்து வருகின்றது. இதுவரை இவ்வாறான 170 நிலையங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. 170000 த்துக்கும் அதிகமானவர்கள் இவற்றால் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். (து)

# உலக வாய்ச்சுகாதார தினம் கொண்டாடிய க்லோகார்ட்

பற்சிதைவைத் தவிர்க்கும் செயற்திட்டத்துடன் உலக வாய்ச்சுகாதார தினத்தை கொண்டாடியது க்லோகார்ட். இலங்கையில் பற்சிதைவைத் தடுக்கும் முதல்தர வர்த்தகநாமமான க்லோகார்ட், பற்சிதைவை தவிர்க்கும் வகையிலான தேசிய மட்ட செயற்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. ஹேமாஸ் மனுபக்டரிங் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் முன்னணி பற்பசை வர்த்தகநாமமான க்லோகார்ட், பற்சிதைவிலிருந்து விடுபட்ட தேசத்தை உருவாக்கும் முயற்சிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. கடந்த பல வருடங்களாக வாய்ச்சுகாதார வழங்குநர் மற்றும் பொறுப்பு வாய்ந்த வர்த்தகநாமம் எனும் ரீதியில் க்லோகார்ட் ஆனது, சிறந்த வாய்ச்சுகாதாரத்தின் முக்கியத்துவம் தொடர்பில் கல்விசார் திட்டங்கள் உள்ளடங்கலாக பரந்தளவான விழிப்புணர்வுத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




வாய்ச்சுகாதாரம் மற்றும் பற்சிதைவைத்தவிர்க்கும் விழிப்புணர்வுத் திட்டங்களை அதிகரிக்கும் வகையில் க்லோகார்ட், உலகவாய்ச்சுகாதாரதினத்தை முன்னிட்டு அண்மையில் நாட்டின் மிகப்பெரிய நகரங்களான கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளில் சிறந்த வாய்ச்சுகாதாரப் பழக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் பலரின் பங்குபற்றலுடன் செயற்றிட்டமொன்றினை முன்னெடுத்திருந்தது. பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் காலையில் பல் துலக்குங்கள், இரவில் பல்துலக்குங்கள், தினசரி இரண்டு முறை பல்துலக்குங்கள் போன்ற வாசகங்களுடன் பெரும்பாலான இலங்கையர்கள் இத்திட்டத்துடன் கைகோர்த்து தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

இலங்கையின் முதல்தர பற்சிதைவுப் பாதுகாப்பாளரான க்லோகார்ட், இலங்கையர் மத்தியில் சிறந்த வாய்ச்சுகாதாரப் பழக்கங்களை உருவாக்கும் வகையிலான விழிப்புணர்வுத்திட்டங்களுக்கு பெருமையுடன் தலைமைதாங்கி வருகிறது. இத்தகைய மாபெரும் ஒன்றுகூடல்கள் ஊடாக, நாடுமுழுவதும் பல்வேறு வாடிக்கையாளர் களைச் சென்றடைந்து பற்சிதைவுத் தடுப்பு நோக்கிய அவர்களது அர்ப்பணிப்பை மீள் உறுதி செய்வதை ஊக்குவிக்க எம்மால் முடிந்துள்ளது என ஹேமாஸ் மனுபக்டரிங் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் குஷானி பீரிஸ் தெரிவித்தார். புளோரைட் அடங்கிய பற்பசை கொண்டு பல் துலக்குவதன் மூலம் மிக எளிதாக பற்சிதைவைத் தடுத்துக் கொள்ளலாம். ஆரம்ப நிலையிலேயே தடுப்பை மேற்கொள்வது முக்கியத்துவம் வாய்ந்தது. வயது வித்தியாசமின்றி குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் புளோரைட் அடங்கிய பற்பசையினால் பல் துலக்கும் போது பற்கள் மீதிருக்கும்மஞ்சள்படிவம்குறைவடைந்து, பல் ஈறுகளின் ஆரோக்கியம் மேம்படுத்தப்பட்டு, பற்சொத்தை ஏற்படுவது தடுக்கப்படுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. புளோரைட் அடங்கிய பற்பசை பயன்பாட்டிற்கு ஆதரவளித்து வரும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொள்கைகளில் பல் சம்பந்தமான நோய்களைத் தடுப்பதில் புளோரைட் பற்பசை பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து எடுத் துக்காட்டப்பட்டுள்ளது. முழுக் குடும்பத்திற்கும் பற்சிதைவுக்கு எதிரான பாதுகாப்பை க்லோகார்ட் வழங்குகிறது. புளோரைட் மற்றும் கராம்பு எண்ணெய் அடங்கிய க்லோகார்ட் பயன்படுத்தி நாளொன்றுக்கு இரண்டு தடவை பல்துலக்குவதன் மூலம் பற்சிதைவு ஏற்படுத்தும் கிருமிகளுக்கு எதிராகப் போராடி சிறந்த வாய்ச்சுகாதாரத்தை பேணுகிறது.

வணிகம்

# நுட்பம்

## பறக்கும் செல்பி ஸ்டிக்



இப்போது எவரைப்பார்த்தாலும் செல்பி செல்பி என்று அலைகிறார்கள். இந்தச் செல்பிக்கு வயது வித்தியாசமே இல்லை. அதேபோன்று செல்பி பிரியர்களிடம் இருக்கும் மற்றொரு சாதனம் செல்பி ஸ்டிக். இந்தநிலையில் இவ்வாறான செல்பி பிரியர்களுக்கு மேலும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் தற்பொழுது பறக்கும் செல்பி ஸ்டிக் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய எல்.ஓ.டி என்ற தொழில் நுட்ப நிறுவனம் வடிவமைத்துள்ள இந்த செல்பி ஸ்டிக், ஆளில்லா விமானத்தின் வடிவமைப்பைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு ரோம் இ என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பறக்கும் செல்பி ஸ்டிக், கைத்தொலைபேசியுடன் இணைந்து கொண்டு 25 மீற்றர் உயரத்திற்குப் பறந்து சென்று ஒளிப்படம் எடுக்கும். அது தவிர இதனைப்பயன்படுத்தி 20 நிமிடங்கள் கொண்ட வீடியோவும் எடுக்க முடியும்.

5 மெகா பிக்ஸல் கெமரா பொருத்தப்பட்டுள்ள இந்த பறக்கும் செல்பி ஸ்டிக் அரை லீட்டர் கொண்ட குளிர்பானப் போத்தலின் அளவைக் கொண்டது. இது மிக விரைவில் சந்தைக்கு வரும் என்று அதன் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சம்சுங்கின் புதிய செயலி




கைபேசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனமான சம்சுங் தனது கைபேசி தயாரிப்புகளில் பயனர் சேவையை வழங்குவதற்கு சம்சுங்+ எனும் செயலியை அறிமுகம் செய்திருந்தது.

இந்த நிலையில், தற்போது இந்தச் செயலியின் புதிய பதிப்பு வெளிவரவுள்ள நிலையில் தொலைவிலிருந்தான வாடிக்கையாளர் சேவை வசதியை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டு வெளிவரவுள்ளது.

இதன் மூலம் கைபேசிகளில் ஏற்படும் கோளாறுகளை சாம்சுங் நிறுவனம் குறித்த செயலி ஊடாக நேரடியாகவே உங்கள் கைபேசியைக் கையாண்டு தீர்வைப் பெற்று தரக்கூடியதாக இருக்கும். இவ் வசதி புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள கலக்ஸி எஸ் 7 மற்றும் எஸ்7 எட்ச் ஆகிய கைபேசிகளில் விரைவில் வெளி வரவுள்ளது என்று சம்சுங் நிறுவனம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்து

கால நிலைக்கு ஒவ்வாததாகவும், பாதுகாப்பற்றதாகவும், அதிக செலவை உடையதாகவும் இந்த வீடுகள் இருப்பதாக, வடக்கு மாகாண சபை தீர்மானத்தில் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தத் தீர்மானம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 65 ஆயிரம் பொருத்து வீடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தத் திட்டத்தை உடனடியாக இடைநிறுத்துமாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த வீட்டுத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, பிரதமரின் சீனப் பயணத்தின் பின்னர் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்றும், மீளாய்வின் அடிப்படையிலேயே இந்தத் திட்டத்தை தொடர்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5-101)

## புத்தாண்டன்று

மழை அல்லது இடியுடன் கூடிய மழை அல்லது மழையின்றி இடி, மின்னல் உருவாக வாய்ப்புள்ளது. அத்தகைய மழை சிறியளவிலேயே இருக்கும்.

தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள வெப்ப நிலையைவிட பிற மாகாணத்தில் வெப்ப நிலை அதிகரித்த நிலையில் உள்ளது. இந்த வெப்பநிலை அதிகரிப்பு பிரதேசம் தோறும் மாற்றமடைந்து வருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெப்பம் தற்போதுள்ளதைவிட மேலும் அதிகரித்துக் காணப்படும். அதற்கு மறுநாளும் அதிகரித்த வெப்ப நிலை காணப்படும். அதற்கேற்றதாக வடக்கில் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.

தற்போதுள்ள அதிகரித்த வெப்பம் காரணமாக, பிற்பகலில் மழை முகில் கூட்டம் உருவாகிறது. அது சில வேளைகளில் மழையாகப் பெய்ய வாய்ப்புள்ளது. ஆனாலும் பெரியளவில் மழையை எதிர்பார்க்க முடியாது.

தற்போது யாழ்ப்பாணத்தில் 36.3 பாகை செல்சியல் வெப்பநிலை நிலவுகிறது. இடி முழக்கம் மற்றும் மின்னலின்போது, அவதானமாக இருக்க வேண்டும் – என்றார். (த-வ-4)

## மகிந்த

இடம்பெற்றிருந்த ஐஸ்லாந்துப் பிரதமர் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

இந்த ஆவணங்களில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளதா என்று ஆராயுமாறு இலங்கை அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பணித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, பனாமா ஆவணங்களில், இலங்கையின் மூன்று அரசியல்வாதிகளின் பெயர்களும் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பனாமா ஆவணங்களில் இடம்பெற்றுள்ள அரசியல்வாதிகளின் பெயர்கள் விரைவில் வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுள்ள அவர், இவர்கள் உயர் பதவிகளில் இருந்தவர்கள் என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் பனாமா ஆவணங்களில் இடம்பெற்றிருக்கும் அரசியல்வாதிகள், மகிந்த ராஜபக்ச குடும்பத்தினராக இருக்கலாம் என்று சந்தேகங்கள் எழுந்துள்ளன. (த-வ-5)

## இரசாயனப்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து தகவல் பெறமுடியவில்லை. எனினும் அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சாவகச்சேரி–மறவன்புலோவில் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு, அவரது மனைவி மற்றும் தந்தையாரும் பொலிஸ் விசாரணையில் உள்ளனர்.

அக்கராயனில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர், யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆரம்ப விசாரணையின் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் கொழும்பு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. இதன்போது அவற்றை இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், குறித்த சந்தேகநபர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதிலிருந்து, மேலதிக தகவல்கள் குறித்துக் கேட்டபோது, அவரிடமிருந்து தகவல்களைப் பெறுவது சிரமமாக உள்ளதாகப் பொலிஸாரால் கூறப்படுகிறது. எனினும் அவர் விசாரணையில்தான் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சம்பவம் மற்றும் வெடிபொருள்கள் மீட்டமை தொடர்பில், நேற்று வரை 11 பேரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் விசாரணை தொடர்வதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். இதில் நேற்று கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேக நபர் தொடர்பில் வாக்கு மூலம் வழங்கியுள்ளார். (த-வ-4)

## இந்திய

நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைத்து 24 மீனவர்களும், மல்லாகம் நீதிமன்ற எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வைத்து 8 மீனவர்களும் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டனர். குறித்த மீனவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு மன்னார் மற்றும் யாழ்ப்பாணச் சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சிறுவர் தொழிலாளர்களும் உள்ளடங்கியிருந்தனர். அத்தகைய சிறுவர் தொழிலாளர்கள் சிறுவர் நன்னடத்தை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்கள் தைப்பொங்கலுக்குப் பின்னரான காலப் பகுதிகளில் கைது செய்யப்பட்டிருந்தவர்கள். அவர்களைக் கடற்படையினர் கைது செய்து, அந்தந்த மாவட்டங்களின் கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவது வழமை.

குறித்த மீனவர்களை விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 32 பேரும் விடுவிக்கப்பட்டிருந்தனர். மன்னாரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 44 மீனவர்களும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் யாழ்.இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுவருடப்பிறப்பு அடுத்த வாரம் வரவுள்ள நிலையில் குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4-56)

## வெள்ள

தினால் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்குச் சமைத்த உணவு உடனடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

இந்த நிவாரண வழங்கலில் மோசடி இடம்பெற்றதைக் கணக்காய்வுக் குழுவினர் கண்டறிந்திருந்தனர். இதன் பின்னர் மாவட்டச் செயலகத்தினால் மூவர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு வெள்ள நிவாரணத்தில் மோசடி இடம்பெற்றமையை உறுதி செய்தது. இதனடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, யாழ். மாவட்ட அரச அதிபருக்கு பரிந்துரைத்திருந்தது. அரச அதிபரினால், இந்த அறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, மேலதிக விசாரணைகளை இந்த மோசடியுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் உயர் அதிகாரிகளிடம் மேற்கொள்வதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்காகக் கொழும்பிலிருந்து அதிகாரிகள் விரைவில் யாழ்ப்பாணம் வந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். (த-வ-5)

## 590 சிங்கள

வாழ்கின்றனர். இவர்கள் 50 வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதி மீனவர்களை அமைச்சர் தனது முல்லைத்தீவுப் பயணத்தின்போது நேரில் சென்று சந்தித்திருந்தார்.

இதன்போது அந்த மீனவர்கள், தாம் காணி உரிமையின்றி இருப்பதாகவும், தமக்கு வீடுகள் கட்டித் தருமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் தடையின்றித் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறும் கேட்டுள்ளனர். இதுவரை அரச உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அமைச்சரிடம் இதன் போது குறித்த சிங்களக் குடும்பங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதனடிப்படையில், சிங்கள மீனவர்களின் வேண்டுகோளுக்கு அமைய 50 வருடங்களாக அங்கு தங்கியிருந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு காணி உரித்து மற்றும் வீடுகள் வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், சிங்கள மீனவர்கள் மாத்திரமல்லாது, தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மாவட்டச் செயலக அதிகாரிகளை உள்ளடக்கிய குழு ஒன்றையும் அமைச்சர் நியமித்துள்ளார் என்று, அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (த-வ-5)

## விகாரையை

இன்று (நேற்று) நேரம் கிடைக்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்று மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்தினேன். இதன் பின்னர் வவுனியாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் நேரம் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இனி எப்போது விகாரையைச் சென்று பார்வையிடுவீர்கள் என்று ஆளுநரிடம் கேட்டபோது, இப்போதைக்குப் பார்வையிடும் திட்டம் இல்லை. ஆனாலும் விகாரை தொடர்பில் பிரதேச செயலாளருடன் கலந்துரையாடியுள்ளேன். அத்துடன் இது தொடர்பிலான ஆவணங்களையும் பெற்றுக் கொண்டுள்ளேன் – என்றார்.

முன்னதாக, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுக் காலை சென்ற ஆளுநர் அங்கு மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலவரங்கள் தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

இதேவேளை, கொக்கிளாயில் அமைக்கப்பட்டு வரும் விகாரையை ஆளுநர் பார்வையிட வருவார் என்று அந்தக் காணியின் உரிமையாளர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் அங்கு காத்திருந்தனர். இவர்களுடன், முல்லைத்தீவு மாவட்டச் சுகாதாரத் தொண்டர்களும் காத்திருந்தனர். சுமார் 5 மணி நேரம் அவர்கள் அங்கு காத்திருந்த போதும், ஆளுநர் வரவில்லை. இதனால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-5-21-101-ரி4-ரி7)

## இன்று

களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு மூன்று பிரிவுகளாக அரசியல் தீர்வுத் திட்ட வரைவு தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இந்த வரைவு தயாரிக்கும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது.

முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தில், இந்த வரைவு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றைய அமர்வில், முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் இந்த அரசியல் தீர்வு வரைவைச் சபையில் முன்மொழிவார். இதன் பின்னர் இந்த வரைவு மீதான விவாதம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கமலாவதி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற ஆசிரியை)



பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த செல்வி கமலாவதி செல்லத்துரை (05.04.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பவானி தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான லீலாவதி, நட ராஜா, சிவகாமசுந்தரி, தேவசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நடராஜா, அம்பிகா தேவி, கனகசபை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (07.04.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**இ.பாஸ்கரன் (பேரமகன்)**
**071 489 8071**

(J.146) (13.18)

### இராமநாதன் கணேஸ்
(முன்னாள் உத்தியோகத்தர் - பருத்தித்துறை கூட்டுறவுச் சங்கம் )



பருத்தித்துறை பூதவராயர் கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கணேஸ் 05.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் அதிஸ்டலட்சுமி அம்மாவின் பாசமிகு கணவரும் லோகதாஸ், மோகனதாஸ், கிருபா ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுஷா, ஜெகதீஸ் ஆகியோரின் பாசமிகு மாமனும் தீபிகா, மகிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் சிவநாயகி பாலேந்திரன் (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை மாணிக்கம், கரு ணேஸ்வரி, சிதம்பரப்பிள்ளை, யோகலிங்கம், விஜய லட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.04.2016) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சுப்பர் மட இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

(சி 22484)(12.18)

**077 6341650**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய்

தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி வருகைதந்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் உள்ள குறுக்கு வீதி வழியாகத் திரும்ப முயன்ற வேளையில், நேரே சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்திற்குள்ளானது.
இதில் இரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐவரும் படுகாயமடைந்துள்ளனர். இவ்வாறு படுகாயமடைந்தவர்களை யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டது.
இதேவேளை இந்த விபத்தில் உயிரிழந்தவரின் 9 வயது மகள் மற்றும் அவரின் சகோதரன் உட்பட மேலும் நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
குறித்த விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-வ-101)

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி**

காலம் :- 10.04.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும்
இடம் :- நீர்வேலி மாட்டுவண்டி சவாரித்திடல்

எனவே அனைத்து காளை உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூலசிட்டி அச்செழு,
நீர்வேலி.
ஆலய நிர்வாகத்தினர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Congratulations

எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி
அனற் சுதர்சிகா இராஜகுமார்
க.பொ.த சாதாரண 2015 பரீட்சையில் 7A B S பெறுபேறு பெற்று சித்தியடைந்துள்ளார்.
இவரையும் இவருடன் சித்தி பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
மிருசுவில் றோமன் கத்தோலிக்க
தமிழ் கலவன் பாடசாலை, மிருசுவில்.

**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**வைப்பு மீளளிப்பு தொடர்பான அறிவித்தல்**

யாழ் மாநகர சபையில் 2013 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நல்லூர் உற்சவ கால வைப்புக்கள், இறைச்சிக்கடை வைப்புக்கள், சந்தைகள், து.வ.பா. நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் சந்தைக் கடைகள், கடை வாடகைகள் மற்றும் நானாவித வைப்புக்கள் என்பன உரியவர்களால் மீளப்பெறப்படாமல் வைப்பில் காணப்படுகின்றது. இவ்வைப்புக்களை உரிய ஆதாரங் களை சமர்ப்பித்து 29.04.2016 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும் 29.04.2016ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெறப்படாத வைப்புக்கள் யாவும் மாநகர சபையின் வருமான கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப் படும் என்பதை அறியத் தருகின்றேன்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதி விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

பொ.வாகீசன்
ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

**இலங்கை மின்சாரசபை**
**கூறுவிலை கோரல்**

பயிலுனர் மற்றும் ஊழியர்களுக்கான விடுதி
இலங்கை மின்சாரசபையின் யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் பயிலுனர் மற்றும் ஊழியர்கள் தங்குவதற்கான விடுதிகள் தேவை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த கேள்விப் பத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும்

1. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் திகதி:-
   07.04.2016 இருந்து 22.04.2016 12.00 மணிவரை
2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்:-
   22.04.2016 பி.ப 2.00 மணி
3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் இடம்:-
   யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்கவும். அல்லது பிரதம பொறியியலாளர் யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள கூறுவிலைப் பெட்டியில் (Tender Box) நேரடியாக இடலாம்.

பிரதம பொறியியலாளர்
யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம்
இலங்கை மின்சாரசபை, சுன்னாகம். 40075 (C/3) (10.17)

# அரசியல் கட்சியொன்றுக்கான சிறப்புரிமையை வழங்குங்கள்

## சபாநாயகரிடம் விமல் வீரவன்ச கோரிக்கை

கொழும்பு, ஏப். 7
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியிலிருந்து விலகி சுயாதீன குழுவாகச் செயற்படும் தமது கட்சிக்கு, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியொன்றுக்கு வழங்கப்படும் சிறப்புரி மைகளை வழங்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச.
இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடிய பின்னர் முடிவை அறிவிக்கின்றேன் என்று சபாநாயகர் கூறி னார்.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.
"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி எதிரணியில் சுயாதீன குழுவாக தேசிய சுதந்திர முன்னணி செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில், எம்மை தனிக் குழுவாக அங்கீ கரித்து கட்சிக்குரிய சிறப்புரிமைகளை வழங்குமாறு ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் உங்களுக்கு (சபாநாயகர்) கடிதமொன்றைக் கையளித்தோம். ஆனால், இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை" - என்றார்.
இதற்குப் பதிலளித்த சபாநாயகர், கோரிக்கை கிடைத்துள்ளது. இது பற்றி ஆராயப்படும். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய பின்னர் முடிவொன்றை அறிவிக்கிறேன் - என்றார்.
குறுக்கீடு செய்த விமல், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி விலகியபோது அந்தக் கட்சி தனிக் குழுவாக அங்கீகரிக்கப்பட்டது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எல்லாம் கலந்துரையாடப்படவில்லை. முடிவெடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கின்றது. அத்துடன், சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படியொரு கோரிக்கை விடுத்தபோது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகினால், முடிவு காண்பது இலகு என்று நீங்கள் (சபாநாயகர்) கூறியிருந் தீர்கள். இப்போது ஏன் நிலைப்பாடு மாறுகின்றது? எனவே, எமக்கு நீதியை வழங்குங்கள். கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் காட்டி இழுத்தடிப்பு செய்ய வேண்டாம் - என்றார்.
இதற்குப் பதில் வழங்கிய சபாநாயகர், நான் தீர்மானம் எடுப்பதை ஒத்திவைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் 17 கட்சிகள் இருக்கின்றன. அவையும் இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. எனவே, கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கும் ஜனநாயக உரிமை எனக்கிருக்கின்றது. அந்த வகையிலேயே நட வடிக்கை எடுக்கப்படும் - என்றார்.
இதன்போது குறுக்கீடு செய்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி விட்டதை அந்த முன்னணிக்கு அறி வித்து விட்டீர்களா? என்று விமலிடம் வினா எழுப்பினார். இதற்கு விமல் பதிலளித்தாலும் அவரது ஒலிவாங்கி இயங்காததால் அவர் என்ன கூறினார் என்பது விளங்கவில்லை. பின்னர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசி விட்டு முடிவொன்றை அறிவிப்பதாக சபாநாயகர் கூறினார். (ற-5)

**சைவ உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை**
சமையற்காரர்
சப்பிளயர் (உணவு பரிமாறுபவர்)
தொடர்பு: 077 350 6499 நிலாவரைச் சந்தி, புத்தூர்.

**விற்பனைக்கு**
இடிபாடுகள் ஒரு டிரக்ரர் 1300/=
விற்பனைக்குண்டு
தொடர்பு : 077 69 35 442

**Personal class**
தரம் 03-A/L வரையான மாணவர்களுக்கு English சிங்களம், Spoken With Grammar கற்க விரும்பவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: 072 171 9052 (பிரபல ஆசிரியர்)

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை அல்வாய் வடக்கு நாவலடிச் சந்திக்கு அண்மையில் ஒரு பரப்பு 3.7 குளி காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு : 077 91 22 108

**பொருள்கள் விற்பனைக்கு உண்டு**
*குளிர்சாதனப் பெட்டி (Singer) ஸ்ரான்ருடன் Rs.20, 000/=
*எயர்கூலர் (Air Cooler Smart Symphony 21 Litres) Rs.14000/
*சன்விச் மேக்கர் (Italy) Rs 2500/=
*கெயர்றையர் (Hairdrier)Italy Rs 1500/=
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
24, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.
077 985 9218

**கண்ணீர் அஞ்சலி**
கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தராக கடமையாற்றும் Dr.ஜ.ஜெயநாமகணேசன் அவர்களின் அன்புத் தந்தையார்
**இளையதம்பி ஐயாத்துரை**
அவர்கள் 06.04.2016 புதன்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அமரருக்கு கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பணியாளர் நலன்புரிசங்கம்,
அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி.

**கண்ணீர் அஞ்சலி**
எமது சங்க உறுப்பினரும், கைதடி சித்த போதனா வைத்தியசாலை வைத்தியருமான ஜெயநாமகணேசன் அவர்களின் அன்புத் தந்தை
**இளையதம்பி ஐயாத்துரை**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்
இலங்கை

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி தயாளினி ஸ்ரீசண்முகா
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
**இந்திரா தேவதாசன்**
அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.
(J/153) (10.17)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தொற்றுக் கழிவுகளை அழிக்க இயந்திரம்

யாழ்ப்பாணம், ஏப்.7
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தொற்றுள்ள கழிவுகளை அழிக்கும் இன்சினேற்றர் மற்றும் மெற்றாமைசர் ஆகிய இயந்திரங்கள் 80 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளன என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.நந்தகுமாரன் தெரிவித்தார்.
குறித்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையின் போது அகற்றப்படும் தொற்றுள்ள உடற்பாகங்கள், தொற்றுள்ள பஞ்சு, துணி உள்ளிட்ட மருத்துவப் பொருள்களை எரித்து அழிப்பதற்கான இயந்திரங்கள் இல்லை. தற்போது குறித்த வைத்தியசாலைக்கு அவை கிடைக்கவுள்ளன.
அவற்றில் இன்சினேற்றர் மூலமாக தொற்றுள்ளகழிவுகள் அனைத்தையும் எரித்து ஆவியாக்கவும் , மற்றாமைசர் மூலமாக குறைந்தளவான தொற்றுள்ள பொருள்களை தொற்று நீக்கி கழிவுகளாக வெளியேற்றவும் முடியும். இவற்றைப் பொருத்துவதற்காக அங்கு இடம் தெரிவு செய்யப்பட்டு அந்த இடம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. அந்த இடத்தில் கொங்கிறீற் போடப்பட்டு இடம் உறுதி செய்யப்பட்ட பின்னர், குறித்த இயந்திரங்கள் அங்கு பொருத்தப்படவுள்ளன. அடுத்த மாதம் குறித்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டுவிடும் என்று பணிப்பாளர் தெரிவித்தார். (ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்புக்கு கூகுள் பலூன் திட்டம்

## பயன்படுத்தலாமா என ஆராய்வு

கொழும்பு, ஏப்.7

இலங்கையில் வைபை தொழில் நுட்பத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கூகுள் பலூன் திட்டத்துடன் தொடர்புபட்டு செயற்படும் அமெரிக்க சோசல் ஹபிடல் நிறுவன ஸ்தாபகர் சமல் பலிஹபிடிய நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடினார்.



இலங்கையில் வைபை தொழில் நுட்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த ஜுலை மாதம் கூகுள் நிறுவனமும், ஐ.சி.ரி நிறுவனமும் ஒப்பந்தத்தில் ஈடுபட்டது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன மற்றும் சமல் பலிஹபிடிய ஆகிய இருவருக்குமிடையில் குறித்த தொழில் நுட்பத்தை பாதுகாப்பு பிரிவுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என கலந்துரையாடல் இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விசேட சந்திப் பொன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

# வடக்கு கூட்டுறவு மே தினம் இம்முறை கிளிநொச்சியில்

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவாளர்கள் இணைந்து நடத்தும் மேதின நிகழ்வு இந்த முறை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு மே தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டன. அதேபோன்று இந்த முறையும் கிளிநொச்சியில் மேதின நிகழ்வை நடத்துவதற்குக் கூட்டுறவாளர்கள் முன்வைத்த கோரிக்கை கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை, வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சினால் கடந்த ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட 100 நாள் வேலைத்திட்டம் மிகப் பெரிய அளவில் வெற்றி யளித்துள்ளதாகவும், அதனை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறும் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்துவதாக கூட்டுறவு அமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளார். (வ-17)

# விமானப்படைக்கு நாமல் ரூ.50 மில். கட்டண நிலுவை

கொழும்பு, ஏப். 7

உள்நாட்டுப் பயணங்களுக்கு விமானங்களைப் பயன்படுத்தியமைக்காக 50 மில்லியன் ரூபா கட்டணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, விமானப்படைக்குச் செலுத்த வேண் டியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

பெரும் நிதி மோசடிகள், மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளிலேயே, நாமல் ராஜபக்ச செலுத்த வேண்டிய 50 மில்லியன் ரூபா விமானக் கட்டணங்கள் பற்றிய விவரங்கள் வெளிவந்துள்ளன.

முன்னைய ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு விமானப் பயணங்களுக்காக விமானப் படை விமானங்களை அவர் வாடகைக்கு அமர்த்தியதற்கான கட்டணங்களே செலுத்தப்படாமல் உள்ளன. சுமார் 150 உள்நாட் டுப் பயணங்களுக்கு நாமல் ராஜபக்ச விமானங்களைப் பயன்படுத்தியிருந்தார்.

இந்தளவு பெரும் தொகையை நாமல் ராஜபக்சவிடம் இருந்து எவ்வாறு விமானப் படைக்குப் பெற்றுக்கொடுக்கலாம் என்று, ஜனாதிபதி ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது. (5)

# பிரதி அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர் நேற்று நியமனம்

கொழும்பு, ஏப். 7

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவால், புதிதாக இரண்டு பிரதி அமைச்சர்களும், ஒரு இராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் இவர்கள் பதவியேற்றனர்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவாரப் பெரும உள்நாட்டு விவகார, வயம்ப அபிவிருத்தி, கலாசார விவகாரப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனுச நாணயக்கார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சராகவும், லக்ஸ்மன் செனிவிரத்ன விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### அப்பையா வர்ணகுலசிங்கம்



மூத்தவிநாயகர் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **அப்பையா வர்ணகுலசிங்கம்** நேற்று (06.04. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா-பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் மங்கைலட்சுமியின் (வயலின் ஆசிரியை) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்லையா-அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் மாலினி (கொழும்பு). மனோகரன் (கொழும்பு). மீரா(கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நடராஜா. திஜா. பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் சுகன்யா. திவாகரன். நிருஜா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

**51,மூத்தவிநாயகர் வீதி,**
**நல்லூர் ,யாழ்ப்பாணம்**

**தகவல்:மனைவி**

### திருச்செல்வம் ரஞ்சித்குமார்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் ரஞ்சித்குமார் நேற்று (06.04. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா- சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் சுலோஜனாவின் பாசமிகு கணவரும் நிர்மலன், மயூரவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரின் சகோதரனும் Dr.பவானி, ரவீந்திரகுமார், விஜயகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 407 1300**

### சின்னலாந்தேசு ஜெகநாதன் (பெரியம்பி)



கல்வியங்காடு அரச வீதியைப் பிறப்பிடமாகவும்நெதர்லாந்து IRM oosterhoot எனும் இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னலாந்தேசு ஜெகநாதன் (பெரியம்பி) 23.03.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னலாந்தேசு மற்றும் இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் பத்மாவதியின் கணவரும் சுமன் (லண்டன்). மதன், சுஜித்தா, சோபிகா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன், செல்வநாதன், ஜெகதாம்பிகை காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் விமலநாதன், விஸ்வநாதன்.காலஞ்சென்ற சுதந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நகுலன், நேசன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.04.2016 பிற்பகல் 4.00 மணியளவில் Yarden Huis van brabant, Florijnstraat-60,4903 Rm oosterhoot, Netherlandஎனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சி. பத்மநாதன் (சகோதரன்)**

# நிர்வாகத் தெரிவு

அச்சுவேலி, ஏப்.7

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தலைவராக கே.வி.குணசேகரமும், உப தலைவர்களாக மா. ஞானலிங்கம், ரி.தங்கராசா ஆகியோரும் செயலாளராக அ.அருந்தவநேசனும், உபசெயலாளராக மா.புவனேந்திரனும், பொருளாளராக என்.ஜெகதீஸ்வரனும், நிர்வாகக் குழு உறுப்பினராக கே.தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-11)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி ஐயாத்துரை



**தோற்றம் 09.03.1924**

**மறைவு 06.04.2016**

உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஐயாத்துரை நேற்று (06 . 04.2016) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-இளையபிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-சின்னதங்கச்சி தம்பதியரின் அருமை மருமகனும் தங்கம்மாவின் ஆருயிர்க் கணவரும் தெய்வானைப்பிள்ளை (கண்மணி), காலஞ்சென்ற பூரணம், காலஞ்சென்ற சின்னம்மா (தங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெபநாம கணேசனின் (வைத்தியர் சித்தபோதனா வைத்தியசாலை-கைதடி) அன்புத் தந்தையும் கனகேஸ்வரியின் (வைத்தியர் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை-கொடிகாமம்) அன்பு மாமனாரும் கீர்த்திகா (3ஆம் வருடம் ஊவாவெல்லச பல்கலைக்கழக மாணவி-பதுளை) பார்த்திகா, சதுர்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பிள்ளைமுத்து, காலஞ்சென்ற ஆறுமுகம், கணபதிப்பிள் ளை, காலஞ்சென்ற இராசம்மா, சிவப்பிரகாசம், சின்னம்மா, சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04. 2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உசன்,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**ஐ.ஜெபநாமகணேசன்(மகன்)**
**077 717 4446**

### பத்மாவதி இராசதுரை



ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மா வதி இராசதுரை 05.04 .2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தாயம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா-கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் பாசமிகு மனைவியும் சிறிகாந்தன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் பலாலி ஆசிரியர் கலா சாலை) காலஞ்சென்ற தயாகாந்தன் மற்றும் பிறேமகாந் தன் (கனடா), ஜெயலலிதா (கனடா), ஜெயகாந்தன், ஜீவகாந்தன் (சிவராம் பிறிண்டஸ்), பகீரதன்(நடத்துனர் CTB காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயதேவி, சுதாஜினி (கனடா), இராசேந்திரம் (கனடா), பத்மரூபி, ஜசிந்தா(யாழ் மாநகரசபை), அனித்தா.ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதுஷன், தினுசா, துஷரா, மீருஷா, ஜெயஜெனூபன், ஜெனோஜன், றஜீவன், சபிராஜ், ஜெசினா, கபிலாஸ், ஸயிலாஸ், தனிஸ்கா, கிஷானிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கமலாதேவி, மகாதேவன், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியு ம் திருஞானம், செல்வராணி(ஜேர்மன்),அமரசிங்கம் காலஞ் சென்ற மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

**மில்லேன்,**
**ஏழாலை மேற்கு,**
**ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 205 9075**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வென்றது ஏ.பி.சி

யாழ்ப்பாணம், ஏப். 7

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஏ.பி.சி. அணி வெற்றிபெற்றது.

வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதால் சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றித் தீர்மானமாகும் நிலைமை ஏற்பட்டது. சம நிலைத்தவிர்ப்பு உதைகளில் ஏ.பி.சி. அணி 12:11 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23-422)

# அரியாலை கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

அரியாலை கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள். சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், இணுவில் அமரகவி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதிக் கொண்டது. இதில் இணுவில் அமரகவி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதிக் கொண்டது. இதில் நாயன் மார்கட்டு பாரதி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதி கொண்டது. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23-422)



# வீரர்களுடன் கலந்துரையாடத் தயார் தீவுகளின் கட்டுப்பாட்டுச் சபை அறிவிப்பு

## சமியின் கருத்துக்கும் கண்டனம்

ரி-20 உலகக்கிண்ணத்தை வென்ற பிற்பாடு, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெரன் சமி, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை மீது வெளிப்படுத்திய விமர்சனங்களைத் தொடர்ந்து, குறித்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்குத் தயாராக இருப்பதாக, கிரிக்கெட் சபையின் தலைவர் டேவ் கமரூன் தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்திக்கிண்ணம் வென்றது மேற்கிந்தியத் தீவுகள். கிண்ணம் வென்றதன் பிற்பாடு அணியின் தலைவரான சமி தனது உரையில், தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையை கடுமையாகத் தாக்கிப் பேசினார். கிண்ணம் வென்றதன் பிற்பாடு தமது கட்டுப்பாட்டுச்சபையிடம் இருந்து வாழ்த்துக்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றதும் ஜெர்சி கூட இல்லாமல்தான் இந்தியா வந்தோம் என்றதும் அனைவரினதும் கவனங்களை வெகுவாக ஈர்த்தன. இது தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடமும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. வீரர்களுடன் இருந்த ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முயல்வதாக தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக தீவுகளின் கிரிக்கெட் சபையின் தலைவர் டேவ் கமரூன் தெரிவிக்கையில்:- ஜூன் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதில் ஊதிய ஒப்பந்தம் தொடர்பாக வீரர்களுடன் கலந்தாலோசிக்கப்படும்.

இந்தச் சந்திப்பில் அனைத்து வீரர்களும் திருப்திப்படும் வகையில் பொதுவான ஒரு நிலைப்பாடு எட்டப்படும் என்று நம்புகிறேன். ரி-20 ஆட்டங்களைப் போல் ஒருநாள், டெஸ்ட் தொடர்களிலும் தீவுகள் மீண்டெழுவதை விரும்புகிறேன். சமி தனது கருத்துக்களை வெளிப்படுத்திய விதம் முறையற்றது. அவை அர்த்தமற்றவை. அவரின் கருத்துக்களுக்காகச் சில வேளைகளில் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படலாம் - என்றார். (ம)

# கிளிநொச்சி மாவட்ட சதுரங்கத் தொடர்

கிளிநொச்சி, ஏப். 7

இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் நடப்பு வருடத்துக்கான இளையோர் சதுரங்கப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் மு.ப. 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

8 வயதின் கீழ், 10 வயதின் கீழ், 12 வயதின் கீழ்; 14 வயதின் கீழ், 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என்ற வயதுப் பிரிவுகளில் இரு பாலாருக்குமாகதொடர்நடைபெறவுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களது பெயர்விவரம்அடங்கியவிண்ணப்பங்களை பொறுப்பாசிரியர் எதிர்வரும் 8ஆம் திகதி கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் உரிய பதிவுக் கட்டணங்களைச் செலுத்தி நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும் எனவும், வருகை தரும் போது குறித்த மாணவர்களது வயதினை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது பிறப்புச்சான்றிதழ்களையும் கொண்டு வருதல் வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டச்சதுரங்கச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-405)

# கிண்ணம் வென்றது நண்பர்கள்

மாங்குளம், ஏப். 7

யங்ஸ்ரார் வி.கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் வவுனியா நண்பர்கள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் நண்பர்கள் அணியை எதிர்த்து வடக்கு ஸ்ரார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நண்பர்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சத்தியமூர்த்தி 101 ஓட்டங்களையும், சந்திரப் பிரகாஸ் 53 ஓட்டங்களையும், வசந்தன் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரார் அணி சார்பில் அகிலன், சுரேஷ் தலா 3 இலக்குகளையும், றொபேட் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் அணி 46.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 200ஓட்டங்களை மாத்திரம்பெற்றது. அதிக பட்சமாக றொபேட் 49 ஓட்டங்களையும், கிரிதரன் 29 ஓட்டங்களையும், அரவிந்தன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நண்பர்கள் அணி சார்பில் சுரேந்திரன் 4 இலக்குகளையும், மனோஜன், வசந்தன் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-422)

# முல்லை விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி, ஏப். 7

முல்லை மாவட்ட விளையாட்டுப் பிரிவினரால் நடத்தத்திட்டமிடப்பட்ட முல்லை மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான குத்துச்சண்டை, மல்யுத்தம், பளு தூக்கல், கராத்தே ஆகிய போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் முல்லை நகர் கடற்கரை மைதானத்தில் மாலை 4.30மணி முதல் இரவு 10 மணி வரை நடை பெறவுள்ளது.

குறித்த தொடர் களில் பங்குபெற விரும்பும் போட்டியாளர்கள் முல்லை மாவட்ட விளையாட்டுக் குழுவினருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அன்றைய தினம் வீர விளையாட்டில் கடந்த காலங்களில் சாதித் தவர்கள் மற்றும் தற்போது சாதித்துக் கொண்டிருக்கும் வீரர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 7

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் நவாலி சென்.பீற்றர்ஸ் அணி மோதவுள்ளன. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதவுள்ளது.

**அல் ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல் ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும்விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து அம்மன் அணி மோதவுள்ளது.

**யாழ். கூடைப்பந்தாட்டம்**

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடல்களில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ். பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (ம-108-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சௌதாம்டனை வீழ்த்தியது லெய்செஸ்டர்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்ட மொன்றில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றுள்ளது.

லெய்செஸ்டர் சிற்றி, சௌதாம்டன் அணிகளுக்கிடையிலான இந்த ஆட்டத்தில் லெய்செஸ்டர் சிற்றி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் பெறப்பட்ட கோலை லெய்செஸ்டர் சிற்றியின் தலைவர் வெஸ் மோர்கன் பெற்றிருந்தார். இந்த வெற்றியுடன் இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் 69 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ள லெய்செஸ்டர் சிற்றி, தனக்கும் இரண்டாமிடத்தில் உள்ள டொட்டேன்ஹாமுக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசத்தை ஏழாக அதிகரித்துக் கொண்டது. (ம)



# இரக்கம் பார்க்காத ஆட்டம் கிரிக்கெட் ஸ்டோக்ஸுக்காக வருந்தும் பிரீத்வைட்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஸ்டோக்ஸை வெளுத்து வாங்கிவிட்டு அவரை புகழ்ந்து தள்ளியுள்ளார் பிரீத்வைட்.

இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பென் ஸ்டோக்ஸ் வீசிய அந்தப் பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ந்து 4 சிக்சர்கள் பறக்க விட்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 2ஆவது முறையாக கிண்ணம் வென்று கொடுத்தார் பிரீத்வைட். இவரது அதிரடியால் இங்கிலாந்தின் உலகக்கிண்ண கனவு சின்னாபின்னமானது. அதேபோல் பென் ஸ்டோக்ஸும் உடைந்து போய்விட்டார்.

இந்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் தொடர்பாக பீரீத்வைட் தெரிவிக்கையில் - ஸ்டோக்ஸுக்காக உண்மையில் வருத்தப்படுகிறேன். கிரிக்கெட் என்பது ஒரு தயவற்ற விளையாட்டு. பென் ஸ்டோக்ஸ் ஒரு ஜாம்பவான். கடைசி 2 மாதங்களாக அவர் இங்கிலாந்துக்குச் செய்ததை மறந்துவிடக் கூடாது. புரோட்டின் பந்துப்பரிமாற்றத்தில் யுவராஜ் சிங் 6 சிக்சர்களை விளாசியதை நினைவுப்படுத்திப் பாருங்கள். ஆனால், புரோட் தற்போது நல்ல உச்சத்திலேதான் இருக்கிறார். ஸ்டோக்ஸுக்கு அந்த இரவு கடினமானதாக இருந்தது. அவருக்கும் இங்கிலாந்து அணிக்கும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பென் ஸ்டோக்ஸ் நீண்ட காலம் இங்கிலாந்து அணிக்கு விளையாட ஆசைப்படுகிறேன் என்று வாழ்த்தியுள்ளார். (ம)




# அப்ரிடிக்கு ஒன்றும் தெரியவில்லை மேலாளர் இன்டிகாப் ஆலம் கருத்து

ரி-20 உலகக்கிண்ணம் மற்றும் ஆசியக்கிண்ணத் தொடர்களில் பாகிஸ்தான் அணியின் தோல்விகளுக்கு அப்ரிடியே காரணம் என்று அணியின் மேலாளர் இன்டிகாப் ஆலம் தெரிவித்துள்ளதுடன், பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நீண்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில்; சமீபத்தில் நடந்து முடிந்த ஆசியக் கிண்ண மற்றும் உலகக்கிண்ணத் தொடரில் நம் அணியில் சகலதுறைகளிலுமே போதாமைகள் வெளிப்பட்டன, களத்தடுப்பிலும் கோட்டை விட்டு எதிரணியினரின் அழுத்தத்தை குறைத்து விடுகின்றனர். மொகமட் ஆமிர் தவிர பந்து வீச்சில் ஒன்றுமில்லை. 20 ஆண்டுகள் அனுபவமிக்க அப்ரிடியிடம் தலைமைத்துவத்தில் எந்தவித புரிதலும் வெளிப்படவில்லை.

மேலும் இரண்டு தேவையற்ற சச்சரவுகளினால் அணிக்கு பின்னடைவு ஏற்பட்டது. முதலில் அப்ரிடி, பாகிஸ்தான் வீரர்கள் பாகிஸ்தானைவிட இந்தியாவில் அதிகம் நேசிக்கப்படுகின்றனர் என்று பேசியது இரண்டாவதாக உமர் அக்மல் தன்னை 3ஆம் நிலையில் களமிறக்க இம்ரான் கான் உதவியை நாடியது.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில், அப்ரிடி தன்னை முன்னால் களமிறக்கிக் கொண்டார், ஆனால், மொகமது கபீஸையே களமிறக்கியிருக்க வேண்டும். எனவே ஒட்டுமொத்தமாக நமது அணித்தேர்வு முறையை மாற்ற வேண்டும். வீரரை நீக்குவது, பிறகு எடுப்பது, பிறகு நீக்குவது என்ற அணுகுமுறை சரியல்ல. கண்டிப்பான தேர்வு அளவு கோல்களை நாம் கடைபிடிப்பது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# அடுத்த ரி-20 உலகக்கிண்ணத்தில் பன்னிரு அணிகள் பிரதான சுற்றில்



ரி-20 உலகக்கிண்ணத் தொடர்களில் சுப்பர் 10 சுற்றுக்குப் பதிலாக சுப்பர் 12 சுற்றை அறிமுகம் செய்ய ஆர்வமாக இருப்பதாகச் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைமை நிர்வாகி டேவிட் ரிச்சட்சன் தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணம் தொடர்பாக அவர் வழங்கிய நேர்காணலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில்; - ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் முறைமை திருப்தி அளிக்கிறது. அதே நோக்கில் இனிவரும் உலகக்கிண்ணத் தொடர்களில் பிரதான சுற்றில் மேலும் இரு அணிகள் விளையாடுவதை விரும்புகிறேன். மேலும் 2 அணிகள் ஆடுவதால் தொடர் விறுவிறுப்பாக இருக்கும். முதல் சுற்று ஆட்டத்தை மேம்படுத்தவும், 2ஆவது சுற்றை மேலும் விறுவிறுப்பாகவும் இது அவசியமானதாகும். என்றார். (ம)

# பாகிஸ்தான் ரி-20 தலைவராக அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்

பாகிஸ்தான் ரி-20 அணியின் தலைவரான அப்ரிடி பதவி விலகியதையடுத்து அணியின் புதிய தலைவராக அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசியக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் ஆகியவற்றில் பாகிஸ்தானின் செயற்பாடு திருப்தியில்லாத வகையில் அமைந்தது. இதனால் அணியின் தலைவரான அப்ரிடி மீது பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அவர் அந்தப் பதவியில் இருந்து விலகினார்.



இதனால் புதிய தலைவராக யார் தெரிவு செய்யப்படப் போகிறார் என்று எதிர்பார்க்கப் பட்ட நிலையில், இலக்குக் காப்பாளரான அஹமட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

யாழ் பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிக்கு அண்மையில் (பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்) 03 படுக்கையறைகளுடனும் Attached bathroom, Toilet உடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவன பணியாளர் தங்குமிடத்துக்கான உபயோகம் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:-

T.P: 077 3270599, 0773580696

# தோல்விகளுக்கு பொறுப்பேற்பதாக தெரிவிக்கிறார் அரவிந்த டி சில்வா

**அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை**

1. SORD (HEIDELBERG) இயந்திர இயக்குநர்
2. KORD (HEIDELBERG) இயந்திர இயக்குநர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

நேர்முகத்தேர்வு: 09.04.2016, சனிக்கிழமை காலை 9.30 - பிற்பகல் 12.30 வரை

ANDRA
379,Kasthuriyar Road, Jaffna
Tel: 0776622981 | 0777481696



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி அடைந்த தோல்விகளுக்கும், உலகக்கிண்ணத்துக்கான அணியில் திரிமன்னேயை இணைத்தமைக்கும் தான் பொறுப்பேற்பதாக, இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளரும் இலங்கையின் முன்னாள் அணித்தலைவருமான அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நடப்புச் சம்பியனாகக் களமிறங்கிய இலங்கை அணி, சுப்பர் 10 சுற்றோடு வெளியேற்றப்பட்டது. 4 ஆட்டங்களில் பங்குபற்றி, ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் மாத்திரமே அந்த அணி வெற்றி பெற்றிருந்தது. இந்தத் தொடருக்கான குழாமைத் தெரிவு செய்வதற்கான பொறுப்பு, இந்தத்தொடருக்காக இலங்கைக் குழாம் இந்தியாவுக்குச் செல்வதற்கு முதல்நாளிலேயே அரவிந்த டி சில்வா தலைமையிலான தெரிவுக் குழுவுக்கு வழங்கப்பட்டதோடு, இலங்கை அணி புறப்பட்ட நாளிலேயே, இலங்கையின் குழாம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. முன்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த குழாமில், லஹிரு திரிமன்னே தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு, நிரோசன் டிக்வெல்லவை நீக்கியே திரிமன்னே இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். தவிர, குழாமிலிருந்து நீக்கப்பட்ட ஜெப்றி வன் டர்சே, அதன்பின் லசித் மலிங்கவின் காயத்துக்குப் பின்னர், குழாமில் சேர்க்கப்பட்டதோடு மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அரவிந்த டி சில்வா – இலங்கை அணியில் நுட்ப ரீதியாகத் துடுப்பெடுத்தாடக்கூடிய சிறந்த துடுப்பாட்ட வீரராக லஹிரு திரிமன்னே காணப்படுகிறார். அவருக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும். எது எப்படியோ உலகக் கிண்ணத்தில் திரிமன்னே சிறப்பாகச் செயற்படவில்லை. அவரைத்தொடரில் சேர்த்தமைக்கும், இலங்கையின் தோல்விகளுக்கும் பொறுப்பேற்கிறேன். மலிங்க உடல் தகுதி இல்லை என்று குறிப்பிட்டார். அவர் தான் உடல் தகுதியுடன் இருக்கிறேன் என்று அனுப்பிய மின்னஞ்சல் உள்ளது. என்ன தொடருக்காக எப்போது அவர் உடற்தகுதி அடைகிறார் என்பதைப் பார்ப்போம் என்றார்.

அரவிந்த டி சில்வா தெரிவித்த, மலிங்க என்ன தொடருக்காக எப்போது உடற்தகுதி அடைகிறார் என்ற வசனம் ஐ.பி.எல். தொடரை குறிப்பதாக கருதப்படுகிறது. (ம)




## பக்ரெய்ன் பந்தயத் தொடரில் ரஸ்பேர்க் சம்பியன்

பக்ரெய்ன் கார் பந்தயத் தொடரில் மெர்சிடிஸ் அணியின் வீரரான ஜெர்மனியின் ரஸ்பேர்க் வெற்றிபெற்றுள்ளார்.

கார்பந்தய ஜாம்பவானான ஹமில்டனின் காருக்கு முன்பாக சென்ற ஒரு கார் விபத்துக்கு உள்ளானது. இதனால் ஹமில்டன் சிறிது பின்னடைவைச் சந்தித்தார். இது ரஸ்பெர்க்குக்கு சாதகமாக அமைய அவர் வெற்றிபெற்றுள்ளார். பக்ரெய்ன் தொடருடன் சேர்த்து, கடந்த வருடம் மெக்ஸிக்கோவிலிருந்து இது வரை தொடர்ச்சியாக ஐந்து பந்தயங்களில் வென்ற நிக்கோ ரஸ்பேர்க், லூயிஸ் ஹமில்டனை விட 17 புள்ளிகள் அதிகமாகப் பெற்றுள்ளார். (ம)

## கலந்துரையாடல்

கரணவாய், ஏப் 7

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு புலோலி ஆசிரியர் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மாகாண மட்ட பெருவிளையாட்டுக்கள் மற்றும் மெய்வன்மைப் போட்டிகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-108)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org